JUNE 60

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

367 -
3-58

25

4-
அணா

5

கண்ணன்

போல் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.

வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்
குடும்பச் சந்தா
ரூ. 12/-

பொருளடக்கம்

மலர்: 1 இதழ்: 6

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2
தீராத விளையாட்டுப் பிள்ளை 3
மின்னல் அரக்கன் - வி. சரஸ்வதி 4
சிபாரிசுக் கடிதம் - மா. முருகேசன் .. 13
ஜக்கு - நாடகம் நடந்தது - 'ஆர்வி' .. 16
கண்ணன் கழக அங்கத்தினர்கள் 23
மணியின் கனவு - ஜி. ஜயராமன் 25
அதிசய மோதிரம் - படங்கள் 31
கண்டெடுத்த முத்து - 'சோமசன்மா' .. 35
பவழவல்லி – கி. ரா. 41
காணுமல்போன பொம்மை - 'சூடாமணி' ... 46
நெருப்புப் பெட்டி 'பர்னிச்சர்கள்' 48
குழந்தை காந்தி - கி. வா. ஜகந்நாதன் ... 49
எழுத்திலே படங்கள் - 'மூட்டை' 56
புரு - தி. ஜ. ர. 57
கண்ணன் தபால் 61
விடு – விடாதே - 'சுண்டு' 64

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

ஒரு குழந்தை சந்தோஷமாக இருக்கும்படி செய்தால், அதில் உண்டாகும் திருப்தி வேறு எதிலும் இல்லை; லட்ச ரூபாய் கொடுத்தாலும் அதை விலைக்கு வாங்க முடியாது. 'கண்ணன்' ஆயிரக் கணக்கான குழந்தைகளின் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் முகத்தில் மலர்ச்சியையும் மாசந்தோறும் உண்டாக்குகிறது. ஒவ்வொரு நாளும் எனக்கு வரும் கடிதங்களைப் படிக்கிறபோது, கண்ணனைக் கையில் ஏந்தி மலர்ந்த முகத்தோடு இருக்கும் உங்களை என் மனக் கண்ணால் பார்த்து மகிழ்கிறேன். இந்த மகிழ்ச்சி வாடாமல் மேலும் மேலும் பெருகும்படி செய்வதற்கு என்ன என்ன வழி என்பதை யோசித்துக்கொண்டிருக்கிறேன். உங்கள் யோசனையும் கிடைத்தால் இன்னும் அற்புதமாகக் 'கண்ண'னை வெளியிடலாம்.

ஆம்; உங்கள் யோசனைகளைத் தான் கேட்கிறேன். ஒவ்வொரு மாதமும் 'கண்ணன்' வருகிறதே! அதில் உள்ள கதை, கட்டுரை, படம் முதலிய அம்சங்களில் எது உங்களுக்கு அதிகமாகப் பிடித்திருக்கிறது? அதை எழுதுங்கள். அடுத்தபடியாக எது பிடித்திருக்கிறது? அதையும் எழுதுங்கள். இப்படியே இதற்கு அடுத்தபடி இது என்று வரிசைப்படுத்தி எழுதுங்கள். உங்களுக்கு ஏதாவது பிடிக்காமல் இருந்தால், அதையும் தயங்காமல் சொல்லுங்கள். உங்களுக்கு எது பிடிக்காதோ, அதை வெளியிடுவதில் என்ன பிரயோஜனம்? உங்களுக்கு எவை அதிகமாகப் பிடிக்கின்றனவோ, அவற்றையே வெளியிட முயல்வேன்.

அப்பா; என்ன கோடை! ஆச்சு, இன்னும் சில நாட்களில் இந்த வெயில் குறைந்துவிடும்; பள்ளிக்கூடம் திறந்துவிடும்; மேல் வகுப்பில் உங்கள் இடம் காத்திருக்கிறது. அடுத்த இதழ் வெளிவருவதற்குள் கண்ணன் கழகப் பதக்கம் உங்களுக்குக் கிடைத்துவிடும்.

கண்ணன் கழகக் கூட்டம் ஒன்று போடுவதாக இருக்கிறோம். அடிக்கடி அந்த அந்த ஊரில் கூட்டம் போடவும் யோசித்திருக்கிறோம். உங்களுக்கு அழைப்பு வரும். முதலில் இங்கே சென்னையில் உள்ள அங்கத்தினர் கூட்டம் நடைபெறும். சென்னையில் உள்ள குழந்தைகள் அவசியம் வந்து சேரவேண்டும்.

''சோமசன்மாவின் கதைகள் பழைய கதைகள்; அவற்றை ஏன் போடவேண்டும்?'' என்று ஒரு பையன் எழுதியிருக்கிறான். அவை பழைய கதைகள் அல்ல; பழைய கதையாக ஆரம்பித்துப் புதிய முறையில் முடியும் கதைகளைச் 'சோமசன்மா' எழுதி வருகிறார். புதிய மாதிரியில் புதிய மாற்றத்துடன் அவர் எழுதுவதைக் குழந்தைகள் கவனிக்க வேண்டும்.

இந்த இதழில் ஜி. ஜயராமன் ஒரு கதை எழுதியிருக்கிறான். பேனாப் பரிசுப் போட்டிக்கு வந்த கதை இது. பரிசு பெறாவிட்டாலும் கதை நன்றாக இருப்பதனால் வெளியிட்டிருக்கிறேன்.

அடுத்த பரிசு காமிராப் பரிசு என்று போன மாதமே தெரிவித்திருக்கிறேனே! அதன் விவரங்களைக் கடைசி அட்டையில் பாருங்கள்!

—ஆசிரியர்.

தீராத விளையாட்டுப் பிள்ளை

புல்லாங் குழல் கொண்டு வருவான்; - அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்;
கள்ளால் மயங்குவது போலே - அதைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம்.

—பாரதியார்

மின்னல் அரக்கன்

வி. சரஸ்வதி

ஒரு காலத்தில் சுவேதபுரி ராஜ்யமும் சாமந்தபுரி ராஜ்யமும் உன்னதமான நிலையில் இருந்தன. இரண்டு தேசத்து அரசர்களும் ஒற்றுமையுடன் இருந்தார்கள். அதற்கு ஒரு காரணம் இருந்தது.

வீரத்திலும் தீரத்திலும் மிகுந்த சுவேதபுரி இளவரசன் சுகுமாரனுக்கு அழகிலும் அன்பிலும் சிறந்த சாமந்தபுரியின் ராஜகுமாரி சித்திரலேகாவை மணம் செய்து கொடுப்பதாக இரண்டு அரசர்களும் எண்ணியிருந்தார்கள். ஆனால்—

இந்த 'ஆனல்' இருக்கிறதே, அப்பாடா, எவ்வளவு பொல்லாத வார்த்தை இது! ஆமாம்; அப்படிப்பட்ட பொல்லாத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

சுகுமாரனும் சித்திரலேகாவும் தக்ஷசீலத்தில் ஓர் ஆசிரமத்தில் குருகுல வாசம் செய்துவந்தார்கள். இருவரும் மிகவும் அந்நியோந்நியமாகப் பழகினார்கள். எங்கே சென்றாலும் சரி, சுகுமாரனும் சித்திரலேகாவும் பிரிய மாட்டார்கள். அந்தி நேரத்திலே ஆசிரமத்தின் ஒரு பகுதியிலே சித்திரலேகா சுனையிலிருந்து நீர் மொண்டு வருவாள். சுகுமாரன் செடிகளுக்குப் பாத்தி கட்டித் தண்ணீர் வார்ப்பான். மறுநாள் அந்தச் செடிகளிலே புஷ்பமாய்ப் பூத்துக் குலுங்கும். சுகுமாரன் பூக்களைக் கொய்து சித்திரலேகாவின் கூந்தலில் சூட்டுவான். அவள் நாணிச் சிரிப்பாள்; ஓடி ஒளிந்துகொள்வாள். அவன் தேடிக் கண்டுபிடிப்பான்.

சிற்சில சமயங்களில் சுகுமாரன் குதிரையின் மீதேறி மின்னலைப்போல ஒளி வீசும் வாளை உருவிச் சுழற்றி விளையாடுவான். அவள் வேடிக்கை பார்த்து நிற்பாள். இவ்விதம் நாட்கள் சென்றபோது படிப்பு முடிந்து தம்தம் ராஜ்யத்துக்குப் புறப்படும் சமயம் வந்துவிட்டது.

இருவருக்குமே அந்த அருமையான குருகுல வாசத்தை விட்டுச் செல்ல வேதனையாய் இருந்தது. ஒரு நாள் மாலை சுகுமாரனும் சித்திரலேகாவும் செல்லமாக வளர்த்த இருவாட்சி மலர்ச் செடியைப் பார்க்கச் சென்றார்கள். சித்திரலேகா அவனுக்குப் பின்புறம் நின்றுகொண்டிருந்தாள். இருவாட்சி மலர் ஒன்றைப் பறித்து அவன் திரும்பிப் பார்த்தபோது திடீரென்று இருள் கவிந்துவந்தது. அங்கே சித்திரலேகாவைக் காணவில்லை. வழக்கம்போல எங்கேயாவது ஒளிந்துகொண்டிருக்கிறாளோ என்று சுற்று முற்றும் பார்த்

தான். பிறகுதான் அவனுக்கு விஷயம் புரிந்தது. இருள் படலத்திலிருந்து மின்னல் சொடுக்குப் போல் இரண்டு தணல் கரங்கள் தோன்றி கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் இளவரசியைக் கவர்ந்து ஆகாய வெளியில் சென்றுவிட்டன.

"சித்திரா, சித்திரா!" என்று கூவினன். எழும்பினன்; ஓடினன்; தவித்தான்; தாவினன் - பிரயோஜனம்—?

ஆசிரமமே அல்லோலகல்லோலப்பட்டது. அரசாங்கங்களுக்குச் செய்தி எட்டியதும் அங்கும் அமர்க்களப்பட்டது. இது மின்னலரக்கன் வேலை என்று பெரியோர்கள் கூறினர்கள். சுகுமாரனுடைய உள்ளம் கொதித்தது. 'எப்படியாவது சித்திரலேகாவை மீட்டு வருவேன்' என்று கங்கணம் கட்டிக்கொண்டு யுத்தத்துக்குக் கிளம்பும் வீரனைப் போல் புறப்பட்டுவிட்டான்.

சுகுமாரன் தன் முயற்சியில் தளராமல் மனம் போனபடி போய்க்கொண்டேயிருந்தான். நிலப்பரப்பின் இறுதி எல்லைக்கு வந்துவிட்டான். மின்னல் அரக்கன் மாளிகை வான மண்டலத்திலே இருக்கிறது என்று அவன் கேள்விப்பட்டிருந்தான். ஒரு நாள் பூமியின் எல்லையில்

நின்று அலைகடல்மேல் தெரியும் வான விளிம்பை அவன் பார்த்துக்கொண்டிருந்தபோது பின்புறமிருந்து, "தம்பீ! என்ன, வானத்தை வில்லாக வளைக்கலாமா என்று யோசனை செய்கிறுயோ?" என்று ஒரு குரல் கேட்டது. சுகுமாரன் திரும்பிப் பார்த்தான். பட்டை பட்டையான ஆடைகளும், கருகருவென்று முறுக்கிவிட்ட மீசையும் கொண்ட நல்ல ஆஜாநுபாகுவான ஒரு மனிதன் அவனைப் பார்த்துக் கடகடவென்று சிரித்தான்.

"யாரப்பா நீ?" என்று கேட்டான் சுகுமாரன்.

"இந்த எல்லைக் கோட்டுக்கு வந்த உனக்கு என்னை யாரென்று தெரியவில்லையா? 'மாயாவி' என்ற பெயரை யாவது நீ கேள்விப்பட்டிருக்கிறுயோ, அதுவும் இல்லையோ? அந்த மாயாவி என்பது நான் தான். இதோ பார்த்தாயா!" என்று கூறிவிட்டு எதிரே சுட்டிக் காட்டினுன்.

சுகுமாரன் உண்மையில் அப்படியே பிரமித்துப் போனுன். அலைகடலின் ஓரத்தில் ஓர் இரும்புச் சங்கிலி கிடந்தது. வான முகட்டை எட்டும் அளவுள்ள சங்கிலி!

மாயாவி மீண்டும் சிரித்துக் கொண்டே, "சமர்த்து இருந்தால் இந்தச் சங்கிலியின் உதவியால் மின்னல் அரக்கன் இருப்பிடத்துக்குப் போகலாமே!" என்ருன்.

சுகுமாரனின் சிந்தனை சுழன்றது. பிறகு, "அது சரி, அப்பா! நான் மின்னல் அரக்கனைத் தேடி வந்திருக்கிறேன் என்பது உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான்.

"எனக்கா தெரியாது? எல்லாம் தெரியும். நீ உண்மையில் சுத்த வீரனுக இருந்தால் இந்த இரும்புச் சங்கிலியைத் தொட்டதுமே அது ஆகாயத்துக்கும் பூமிக்குமாக இணைந்துவிடும். எங்கே தொடு, பார்க்கலாம்" என்ருன் மாயாவி.

சுகுமாரன் சங்கிலியைத் தொட்டதுதான் தாமதம். கண கண என்ற சத்தத்துடன் சங்கிலி மேலே எழும்பலாயிற்று. மாயாவி மலைத்துப் போனுன். சுகுமாரன், "மாயாவியே, நீயும் என்னுடன் வருகிருயா? உன் சிநேகத்தைப் பெற என் மனம் மிகவும் விரும்புகிறது" என்ருன்.

மாயாவி, இப்பொழுதும் சிரித்தான். "நீயோ சுத்த வீரன் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. நான் உனக்கு எந்த விதத்தில் பயன்படப் போகிறேன்?" என்ருன்.

"சங்கிலியின் கீழே நின்று கொள். நான் மேலேறிச் செல்கிறேன். நான் வரும்வரையில் நீ இங்கிருந்து பார்த்துக்கொண்டால், அதுவே போதும்" என்ருன் சுகுமாரன்.

மாயாவி சம்மதித்தான். சுகுமாரன் மேலேறிச் சென்ருன். கொஞ்சதூரம் சென்றதும், 'அடேயப்பா, உலகமே சிறிய புள்ளிபோலத்தான் தெரிகிறது. வானிலே மற்ருெரு மண்டலம் இருப்பதே தெரியவில்லையே' என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

சுகுமாரன் இரவு பகலாக

சங்கர்...

ஏறிக்கொண்டிருந்தான். பசி தாகத்தினால் அவன் களைத்திருந்தான். ஆனாலும் சித்திரலேகா என்ன ஆனாளோ, மின்னல் அரக்கனிடமிருந்து அவளை எப்படித் தப்புவிக்கப் போகிறோமோ என்ற ஞாபகத்தில் அவன் களைப்பை மறந்தான். புகை மூட்டம்போல தூரத்தில் வெண் மாளிகைகள் தெரியலாயின. சங்கிலி முடிவை நெருங்க நெருங்க, கால்கள் சோர்ந்து போயின. கைப்பிடி தளர்ந்து கொண்டே போயிற்று. பல முறை சோகம்போட்டு விழுந்து விடுவான் போலிருந்தது. நா வறண்டுபோயிற்று. ஆயினும் அவன் நெஞ்சுறுதி குன்றவில்லை.

கடைசியாக இன்னும் ஒரு விநாடியானால்கூட அவன் பிடியை நழுவவிட்டுவிடுவான். "உம்...ம்..." என்று தன் பலமனைத்தும் சேர்த்து ஒரே தாவாகத் தாவி, சாலையில்போய் விழுந்துவிட்டான். எவ்வளவு நேரம் தன் நினைவு இல்லாமல் விழுந்து கிடந்தானோ தெரியாது. குளிர்ந்த காற்று சிலு சிலு என்று வீசவே கண் விழித்தான். அவன் பக்கத்தில் வெள்ளை உடை தரித்த மோகினி போல ஒரு பெண் வீற்றிருந்தாள்.

"யாரம்மா நீ? இது எந்த இடம்?" என்று கேட்டான் சுகுமாரன்.

"உஸ்... இரைந்து பேசாதே. மின்னல் அரக்கனுடைய இடம் இது! நீ எங்கே வந்தாய்?" என்றாள் அவள்.

"சித்திரலேகா என்ற ராஜகுமாரியை இந்த அரக்கன் அபகரித்து வந்துவிட்டான். அவளை மீட்டுப்போகவே நான் வந்தேன்" என்றான் சுகுமாரன்.

உடனே மோகினியின் முகம் கோபத்தினால் சிவந்தது. "அவள் என்ன, என்னைவிட அப்படி அழகில் சிறந்தவளோ?" என்று கேட்டாள்.

சுகுமாரன் யோசித்தான். தந்திரமாகப் பேச நினைத்து, "அவள் என்ன இருந்தாலும் பூலோகப் பெண்தானே! உன் அழகு எங்கே? அவள் அழகு எங்கே?" என்றான்.

"சபாஷ்! அப்படிச் சொல்லு! எப்படியும் இந்த மின்னல் அரக்கனைப் பழிவாங்கியே தீருவேன். ஆனால் ஒன்று: நீ அவனைக் கொல்லாமல் அந்தப் பெண்ணைமட்டும் கொண்டு போவாயானால் உனக்கு வேண்டிய உதவி செய்கிறேன்" என்றாள் மோகினி.

சுகுமாரன் அதற்கு ஒப்புக் கொண்டான்.

"சரி, அதோ தெரியும் மாளிகைக்குப் போ! வலதுபுறம் திரும்பினாயோ தொலைந்தாய். இடது புறம் போனால் சித்திரலேகாவைக் காண்பாய்! உடனே எப்படியாவது தப்பிச் சென்றுவிடு" என்றாள் மோகினி.

அவள் கூறியபடியே பதுங்கிப் பதுங்கிச் சுகுமாரன் சித்திரலேகா இருந்த மாளிகை மண்டபத்தை அடைந்துவிட்டான்.

சித்திரலேகா அவனைக் கண்டதும் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப் போனாள். அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. "நீங்கள் எப்படி வந்தீர்கள்?" என்று நாக்குழறக் கேட்டாள்.

"உன்னை மீட்டுப் போகவே எப்படியோ வந்துவிட்டேன்" என்றான் சுகுமாரன்.

"ஐயோ! மின்னல் அரக்கனை நினைத்தாலே குலை நடுங்குகிறதே!" என்றாள் சித்திரலேகா.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போது தூரத்தில் இடியைப் பழிக்கும் ஓசை ஒன்று கேட்டது. அண்டமே அதிர்வதுபோல அந்தக் கோட்டையே கிடுகிடுவென்று ஆடியது.

"அவன்தான் வருகிறான்! நீங்கள் இங்கே எங்காவது மறைந்துகொள்ளுங்கள்" என்றாள் சித்திரலேகா.



"அவன் இருப்பிடத்தைச் சொல்லிவிடு, ஜல்தியாக" என்ருன் சுகுமாரன்.

"செப்புப் பாலத்தின் வழியாகப் போனல் வலது புறத்தில் அவனுடைய மாளிகை இருக்கிறது. நீங்கள் அங்கே ஒளிந்து கொண்டால் அவன் களைத்துப் போய் வருவான்" என்ருள் சித்திரலேகா.

சுகுமாரன் அவ்விதமே உடைவாளை உருவிக்கொண்டு தயாராகப் பாலத்தினடியில் ஒளிந்துகொண்டான்.

மின்னல் அரக்கன் வரும் ஆரவாரம் கேட்டது. அவன் ஏறிவந்த குதிரை பாலத்தினடியில் வந்ததும் தயங்கிக் கனைத்தது. முன்னங்கால்களைத் தூக்கி உறுமிற்று.

மின்னல் அரக்கன் அது பாலத்தைக் கடந்து செல்ல மறுப்பதைக் கண்டு, "ஏன் பயப்படுகிருய்?" என்ருன்.

"நரவாசனை வீசுகிறது! நான் போகமாட்டேன்" என்றது குதிரை.

"சே! எவனுய் இருந்தாலும் சரிதான். அவன் தூசிகூட இந்த உலகத்தில் நுழைய முடியாது. போ, பயப்படாமல்."

சுகுமாரன் இந்தச் சமயம் பார்த்துத் துள்ளி எழுந்தான். மின்னல் அரக்கனை அப்போது தான் அவன் நேருக்கு நேராகக் கண்டான். மூன்று கோரமான தலைகள்; பயங்கரமான உடல்! கன்னங்கறேலென்று புகைபோன்ற பூதாகாரமான தோற்றம். தணல்போன்ற கைகள்; விழிகள்! சுகுமாரன் சிறிதும் அஞ்சாமல், "அடே முட்டாள்! என் தூசிமட்டுமில்லை. என் முழு உடம்புடன் இதோ இங்கேவந்துவிட்டேன். உன்னுடன் சண்டையிடவே இங்கு வந்திருக்கிறேன். என்ன சொல்கிருய்?" என்ருன்.

ஒரு கணம் மின்னல் அரக்கன் அப்படியே அசந்து போனன். பிறகு பயங்கர மாய்ச் சிரித்துக்கொண்டே, "அற்பப் பதரே! என்னுடனு சண்டையிடப் போகிருய்? ஹ...ஹ...ஹா! வா பார்க்கலாம், ஒரு கை! கத்திச் சண்டையா? குத்துச் சண்டையா?" என்று கர்ஜித்தான்.

"இரண்டு விதமாகவும் பார்த்துவிடலாமே?" என்ருன் சுகுமாரன் தீரத்துடன்.

முதலில் இருவரும் வாளை உருவிக்கொண்டு வெகு உக்கிரமாய் ஒருவர்மேல் ஒருவர் பாய்ந்தார்கள். ஒரே வீச்சில் மின்னல் அரக்கனின் வாள் உடைந்து விழுந்தது. சுகுமாரனின் வாள் மின்னல் அரக்கனின் தலையைச் சீவத் துடித்தது.

ஆனல் சுகுமாரன், "நிராயுதபாணியான உன்னைக் கத்தியால் கொல்ல நான் விரும்பவில்லை!" என்று சொல்லிவிட்டுக் கத்தியைக் கீழே எறிந்தான்.

மல்யுத்தம் ஆரம்பமாயிற்று. உலகத்தில் என்றுமே நிகழ்ந்திராத அப்படி ஒரு கோரமான யுத்தம். ஒருவரை ஒருவர் கட்டி விழுந்து புரண்டார்கள். இரண்டு ஜாமமாகியும் ஒருவரும் சளைக்கவில்லை. குதிரையோ மிரண்டு பாலத்தில் குதித்துவிட்டது. கடைசி

யாகச் சுகுமாரன் மின்னல் அரக்கனின் ஒரு தலையை ஒரே குத்தில் பெயர்த்து எறிந்தான். அடுத்து மறுபடியும் நடந்த யுத்தத்தில் அரை மணி கழித்து அரக்கனின் மற்ருெரு தலையும் காற்றில் ஜிவ்வென்று பறந்தது.

மின்னல் அரக்கனுடைய உக்கிரமான தோற்றத்தைப் பிறகு பார்க்கவேண்டுமே. ஆஹா, என்ன பயங்கரம்!

அண்டமே அதிர்ந்தது. மண்டலமே கிடுகிடுத்தது. தரையும் பாலமும் தவிடுபொடியாயின. சுகுமாரன் முதலில் புலியைப் போலப் பதுங்கினன். பதுங்கப் பதுங்க மின்னல் அரக்கன் முன்னேறி வந்தான். சிறிது நேரமாயிற்று. தன் முழு பலமனைத்தும் சேர்த்து நேராக ஒரு குத்து விட்டானே பார்க்கலாம்!'கிர்'என்று மூன்ருவது தலை ஆகாயத்தில் தனியாகப் பிடுங்கிக்கொண்டு எழுந்தது. ஆனல் என்ன ஆச்சரியம்! மறுபடியும் அவன் கழுத்துடனேயே வந்து சேர்ந்து கொண்டது. இருவருமே சோர்ந்து விழுந்தார்கள். "தண்ணீர் தண்ணீர்" என்று கதறினன் மின்னல் அரக்கன். ஆனல் விரைவிலேயே சுகுமாரனுக்குப் பழைய பலம் வந்துவிட்டது. எழுந்தான்; ஒரே திருகாக அரக்கனின் தலையைத் திருகி உடலைத் தனியாகத் தூக்கி எறிந்தான்.

"அப்பாடா!" என்று மாளிகைக்குத் திரும்பினன். சித்திரலேகா அவன் வரவுக்காகக் காத்திருந்தாள்.

இருவரும் ஆடிப் பாடிக் கொண்டு சாலையில் தொங்கிய சங்கிலியருகில் வந்து சேர்ந்தார்கள். "முதலில் நீ இறங்கு, சித்திரலேகா! அங்கே ஒரு மாயாவி நிற்பான். அவனைத் தான் கீழே காவலுக்கு வைத்திருக்கிறேன்" என்ருன் சுகுமாரன்.

சித்திரலேகா இறங்கிச் சென்ருள். ஒரு சமயம் பாதியில் சங்கிலி அறுந்துவிடாமல் இருக்க வேண்டுமே என்று கடைசி வரையில் சுகுமாரன் அந்த விளிம்பிலேயே நின்ருன். கண்ணுக்கு எட்டிய தூரம் அவள் இறங்கிப் பிறகு மறைந்ததும், பின்னலிருந்து 'கிரீச்' என்று ஒரு சத்தம் வந்தது. திரும்பிப் பார்ப்பதற்குள் அந்த மோகினி அவன் எதிரே நின்ருள். அப்பொழுதுதான் அவளுக்கு அவன் கொடுத்த வாக்கு நினைவுக்கு வந்தது.

"அடே பாவி! அவனைக் கொல்ல மாட்டேன் என்று சொல்லிவிட்டுக் கொன்றுவிட்டாயே!" என்று அவள் மூர்க்கமாய்ப் பாய்ந்து அந்தச் சங்கிலி இணைப்பைப் பிடுங்கி அறுத்துவிட்டாள். அவ்வளவுதான்! சங்கிலி கீழே, கீழே போய்க் கடைசியில் கண்ணுக்கே புலப்படாமல் பூமியை அடைந்துவிட்டது.

சுகுமாரனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. மோகினியோ மறைந்து விட்டாள். கீழே இறங்க வகை தெரியாமல் நின்றபோது மின்னல் அரக்கனின் குதிரை அவனிடம் வந்து நின்று, "இனி நீங்கள் தான் என் எஜமானன். நான் உங்கள் அடிமை" என்

றது. சுகுமாரன் சந்தோஷ மடைந்து குதிரைமீது ஏறி, கீழே இறங்கலானான்.

ஆனால் என்ன மோசம்! சித்திரலேகாவையோ, அந்த மாயாவியையோ அந்த இடத்தில் காணவில்லை!

இது இப்படியிருக்க, சித்திரலேகா என்ன ஆனாள் தெரியுமா?

மாயாவி அவளைத்தான் ஆவலுடன் இவ்வளவு நாளும் எதிர்பார்த்துக் காத்திருந்தான். மின்னல் அரக்கனிடம் தப்பினாலும் மோகினியிடமிருந்து சுகுமாரன் தப்பி, திரும்பி வரமாட்டான் என்றே அவன் நம்பினான். அதற்கிணங்க, சங்கிலியும் அறுந்து விழவே, அவன் எண்ணம் ஊர்ஜிதம் ஆயிற்று. தைரியமும் அதிகரித்தது. சித்திரலேகா மயக்க நிலையில் இருந்தாள். மாயாவி அவளை எடுத்து ஒரு குதிரைமீது ஏற்றிக் கொண்டு சாமந்தபுரியை அடைந்தான்.

"நான்தான் இவளை மீட்டு வந்தேன்" என்று எங்கும் எல்லாரிடமும் பெருமையடித்துக் கொண்டான். சித்திரலேகா மறுத்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. நாளாக ஆக அந்தப் பொய்யே உண்மையோ என்ற பிரமை அவளுக்கு ஏற்பட்டுவிட்டது.

அரசன் ஆனந்தப்பட்டான். ஜனங்கள் குதூகலத்தினால் கொண்டாடினார்கள். கடைசியில் சாமந்தபுரி அரசன் மாயாவிக்கே சித்திரலேகாவை மணம் செய்து வைக்கப் போவதாக அறிவித்துவிட்டான்.

நகரெங்கும் தோரணங்களும் அலங்காரமுமாய் அமர்க்களப்பட்டது. கல்யாண நாள் நெருங்கியது. சித்திரலேகாவின் மன நிலையை வர்ணிப்பது அசாத்தியம். "அப்படியே இந்த மாயாவி என்னைக் காப்பாற்றியவனாகவே இருக்கட்டும்! சுகுமாரனை என்னால் எப்படி மறக்க முடியும்?" என்று அவள் தோழிகளிடம் சொல்லிப் புலம்பினாள்.

அரசன் இதைக் கேள்விப்பட்டு, அவளை அன்புடன் நெருங்கி, "கண்ணே, சித்திரலேகா! உன்னை யார் உயிரோடு மீட்டு வருகிறார்களோ அவர்களுக்கே உன்னை மணம் செய்து வைப்பதாக அறிவித்துவிட்டேன். அதற்கு மாறாக நான் நடந்துகொள்ளலாமா?" என்று அவளைத் தேற்றினான்.

மறுநாள் கல்யாண நாள். முதல் நாள் மாலை ஒரு பெரிய போர்வீரன் அரசனுடைய பேட்டிக்காகக் காத்திருக்கிறான் என்று அறிவிக்கப்பட்டது. அரசனும் மாயாவியும் அப்பொழுது சிற்றுண்டிக்காக உட்கார்ந்திருந்தனர்.

"வீரனா? போர்வீரனா? சரி; வரச்சொல்" என்றான் மாயாவி மிகவும் கேலியாக.

போர்வீரன் முகமூடி அணிந்திருந்தான். இருந்தாலும் அவன் ஆஜாநுபாகுவாய் இருந்தான். அவன் நடந்து வருவதே ஓர் அழகாய் இருந்தது. கம்பீரமாய் இருந்தது.

"என் தேசம் வீரமாபுரி என்பது! என்னை வென்ற வீரர்கள் இந்த உலகத்தில் யாரு

மில்லை. உங்கள் மருமகனுகப் போகிறவர் பெரிய வீரர் என்று கேள்விப்பட்டேன். பார்க்கலாம் என்று வந்தேன்'' என்றான் அந்த வீரன்.

மாயாவி மனசுக்குள் துணுக் குற்றான். 'ஐயையோ! வீரனு?' என்று அவன் நெஞ்சு படபட வென்று அடித்துக்கொண்டது. இருந்தாலும் அதைக் காட் டிக்கொள்ளாமல், ''இந்த உல கத்திலேயே உன்னை வென்ற வர்கள் யாருமில்லையோ?'' என்று நையாண்டியாகக் கேட் டான்.

''ஆமாம்'' என்றான் அந்த வீரன் பணிவுடன்.

அரசன் இதையெல்லாம் பார்த்துக்கொண் டிருந்தான்.

''உன்னைவிட வீரச் செயல் புரிந்தவன் யாருமே இல்லை என்று தெரியுமோ உனக்கு?'' என்றான் மாயாவி.

''தெரியும்'' என்றான் வீரன்.

''மின்னல் அரக்கனின் சங்கி லியை இழுத்த கை இதோ இருக்கிறது, தெரியுமா?''

''இருக்கலாம்; ஆனல் இந்தக் கையினுல் என்னைக்கூடத் தூக்கி நிறுத்த முடியாதே. எங்கே, கை நீட்டி உள்ளங் கையில் என்னைத் தூக்கிவிடுங் களேன், பார்க்கலாம்!''

இதற்குள் அங்கே சித்திர லேகா வந்தாள். மந்திரிப் பிர தானிகள் வந்தார்கள். மற்றும் பலர் வந்து கூடிவிட்டார்கள்.

மாயாவி உண்மையில் வெல வெலத்துப் போனுன். இருந் தாலும் வீராப்புடன், ''உலகத் திலேயே ஒருவனை மற்றவன் உள்ளங்கையில் தூக்கிய தில்லையே'' என்றான்.

எல்லாரும் இதைக் கேட்டு வீரனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தார்கள்.

''அப்படியா? இதோ, நீங்கள் நில்லுங்கள். நான் தூக்குகி றேன்'' என்று, கையை நீட்டி னுன்.

பாவம், அந்த மாயாவி காலும் கையும் மெய்யும் மன மும் நடுங்க அவன் கைமீது ஏறி நிற்கவேண்டியதாயிற்று. வீரன் சிறிதுநேரம் அவனைத் தாங்கியபடியே நின்றான். அடுத்த கணம் கையை ஒரே சுழற்றுகச் சுழற்றி மாயாவி யைப் பந்துபோலச் சுற்றி வெளியே வீசினுன்.

''மின்னல் அரக்கனின் சங் கிலியை நிறுத்திய கை யாரு டையது, தெரியுமா? துரோகி! இதோ, என்னுடையது'' என்று தன் முக மூடியைத் திறந்தான்.

''சுகுமாரன்!'' என்று எல் லாரும் ஆச்சரியத்தோடு கூவி னுர்கள்.

சித்திரலேகா அப்படியே ஓடி வந்து அவன்மீது சாய்ந்து கொண்டாள். அவளை அன் புடன் தேற்றி, சுகுமாரன் ஆறு தல் வார்த்தைகள் சொன்னுன்.

மறுநாள் நடக்கவேண்டிய சுப முகூர்த்தம் நின்றுவிட வில்லை. நடக்கத்தான் நடந் தது. ஆனுல் சித்திரலேகா கண்ணைக் கசக்கிக் கொண்டி ருக்கவில்லை. சுகுமாரனைக் கடைக்கண்ணுல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிபாரிசுக் கடிதம்

மா. முருகேசன்

"வேணி!"

"வேணீ, வேணீ!" என்று ஒரு குரல் கேட்டது. "ஓ! காந்திமதியா?" என்று வேணி திரும்பினாள்.

"வேணி! அநாதை ஆசிரமத்திற்குப் போகிறேன்."

"ஓஹோ! வேலைக்கா?" என்றாள் வஞ்சகச் சிரிப்புடன்.

"ஆமாம்; நீ?"

நானும் அந்த வேலைக்குத்தான் கேட்கப்போகிறேன். அது இருக்கட்டும். நீ யாரிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கினாய்?"

"சிபாரிசுக் கடிதமா?"

"என்ன விழிக்கிறே? இதோ பார்" என்று ஒரு காகிதத்தைக் கொடுத்தாள் வேணி. காந்தி அதைப் படித்தாள்:

தேவை: சென்னை, பெண்கள் அநாதை ஆசிரமத்திற்கு, கணக்கு எழுதும் வேலைக்கு, ஒரு பெண் தேவை. தகுந்த அத்தாட்சிப் பத்திரங்களுடன் திங்களன்று காலை 9 மணிக்கு நேரில் வரவும்.

(ஒப்பம்) கலாவதி, நிர்வாகி.

"ஐயோ! நான் சிபாரிசுக் கடிதம் கொண்டு வரவில்லையே" என்று துடித்தாள் காந்தி. அதைக் கண்டு வேணி மனத்திற்குள் மகிழ்ந்தாள்!

"வேணி, என் தாய் மிகவும் சிரமத்துடன் கூலி வேலை செய்கிறாள். என் பாவாடை தைக்க அவள் இரண்டு ரூபாய் கடன் வாங்கினாள். அதை எப்படித் தீர்ப்பாள்? நான் வேலையில் சுலபமாகச் சேரலாம் என்று எண்ணி ஏமாந்தேன்." காந்திமதியின் வாய் குழறியது. திடீரென 'தொப்' என்று நடுப்பாதையில் விழுந்துவிட்டாள்!

"ஏய், ஓரம்" என்று கூவிக்கொண்டே வந்த ஒரு ரிக்ஷாக்காரன், 'சடக்' என நின்றான்.

"வண்டியைக் கீழே விடப்பா" என்று சொல்லிக்கொண்டே ஓர் அம்மாள் இறங்கினாள்.

காந்திமதியைத் தூக்கி, பக்கத்து வீட்டுத் திண்ணையில் கிடத்தினார்கள். முகத்தில் தண்ணீர் தெளித்து விசிறினார்கள். சிறிது தண்ணீரும் குடிக்க வைத்தார்கள். காந்திமதி மெதுவாகக் கண்ணைத் திறந்ததும், "நீ காலையில் ஒன்றுமே சாப்பிடவில்லையா, குழந்தாய்!" என்றாள் அந்த அம்மாள்.

"இல்லை, நேரமாய்விட்டது" என்றாள் காந்திமதி.

அருகே இருந்த ஹோட்டலுக்குச் சென்று ரிக்ஷாக்

காரனைவிட்டு சிற்றுண்டியும் காபியும் வாங்கி வரச்சொல்லி, காந்திமதியை வற்புறுத்திச் சாப்பிடச் சொன்னாள்.

"நீ போகவேண்டிய இடத்துக்கு இந்த ரிக்ஷாவில் போ. நான் என் வேலைக்குப் போக வேண்டும்" என்று கூறியபடி அவள் போய்விட்டாள்.

"அம்மா! நீங்க எங்கே போகணும்?" என்றான் ரிக்ஷாக்காரன்.

"அநாதை ஆசிரமத்திற்கு" என்றாள் காந்திமதி.

"சரி, ஏறுங்கள் வண்டியில்."

"இல்லை, நான் நடந்தே போகிறேன்."

வேணியும் காந்திமதியும் அநாதை ஆசிரமத்தை அடைந்தார்கள்.

ஆசிரம மணி ஒலித்தது. "வாழ்க நிரந்தரம்; வாழ்க தமிழ் மொழி; வாழிய வாழியவே" என்ற பாட்டு எழுந்தது. பல நூறு இளம் பெண்கள் பாடினார்கள். பாட்டு முடிந்ததும் ஆசிரம நிர்வாகியின் அறையை நாடிச் சென்றாள் காந்திமதி. ஒருவர் பின் ஒருவராக, ஒழுங்காக அங்கே சுமார் 25 பெண்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு மாணவியாக நிர்வாகியின் அறையினுள் நுழைந்து, சற்று நேரம் கழித்து வெளியே வந்தனர்.

ஆசிரமத்தின் தரை சுத்தமாக இருந்தது. சுவர் வெள்ளையாக, ஒரு பென்சில் கோடுகூட இல்லாமல் இருந்தது. கூரையில் ஒட்டடை, சிலந்தி வகையே இல்லை. வரிசை மெதுவாக நகர்ந்தது. வேணியும் உள்ளே போனாள்.

"வெளியே இன்னும் எத்தனை பேர்?" என்றாள் நிர்வாகி.

"ஒருவர்தான்!" என்றான் காவலன்.

"உள்ளே அனுப்பு."

காந்திமதி மெதுவாகக் கதவைத் திறந்தாள்; சத்தமிடாமல் மூடினாள். கால்களைத் துடைத்துக்கொண்டு சென்றாள். நிர்வாகியை வணங்கி நின்றாள்.

"உட்கார்."

காந்திமதி உட்கார்ந்தாள். ஏதோ ஒரு காகிதம் காற்றில் பறந்து, கீழே விழுந்தது. காந்தி அதனை எடுத்து, மேஜை மேல் வைத்தாள். ஏற்கனவே ஒரு புத்தகம் கீழே விழுந்து கிடந்தது. வேணி அதை மிதித்தபடி உட்கார்ந்துகொண்டிருந்தாள். காந்திமதி அதை எடுத்தாள்; அதன் மேலுள்ள மண்ணைத் தட்டினாள்; மேஜைமீது ஒரு புறமாக வைத்தாள்.

"யாரைத் தேர்ந்தெடுத்தீர்கள்?" என்று கேட்டபடி ஓர் அம்மணி வந்தாள். அவள் ஆசிரமத்தின் சொந்தக்காரி.

காந்திமதி தன் இடத்திலிருந்து எழுந்தாள். வேணி தான் உண்டு, தன் வேலை உண்டு என்று எண்ணியவாறு

கால்மேல் கால் போட்டபடி உட்கார்ந்திருந்தாள்.

"இதோ இந்தப் பெண்ணைத்தான் நான் விரும்புகிறேன்" என்று காந்திமதியைக் காட்டினாள் நிர்வாகி.

"இவள் யார்?" என்றாள் தலைவி.

"இவள் மிகவும் அடக்கமானவள். ஏழை, ஆனால் நற்குணம் நிரம்பியவள்; புத்திசாலி. சுத்தமுடையவள்" என்றாள் கலாவதி.

"எப்படி இவள் குணத்தைக் கண்டீர்கள்?" என்றாள் தலைவி.

"கதவைத் திறந்து, மெதுவாக மூடினாள்; கால் மண்ணைத் துடைத்துக்கொண்டாள்; சொன்ன பிறகே உட்கார்ந்தாள்; விழுந்த புத்தகத்தைத் துடைத்து, எடுத்து வைத்தாள். தாங்கள் வர, எழுந்து, வணங்கி, தன் இடத்தைத் தந்தாள். அவள் உருவம் சுத்தத்தைக் காட்டுகிறது; அவள் செயல் அடக்கத்தைக் காட்டுகிறது; அவள் முகம் அவள் மனத்தைக் காட்டுகிறது" என்று கூறினாள் கலாவதி.

"பிறகு?" என்றாள் தலைவி.

"எல்லாரும் பலமான சிபாரிசுக் கடிதங்களுடன் வந்தார்கள். இவளுக்குத் தன் குணங்களே சிபாரிசு. தவிர, வரும் வழியில் இவள் மயங்கி விழுந்தாள். நான் செய்த உபசாரத்தையும் ஏற்க மறுத்தாள். இவள் நன்னடத்தை நிரம்பியவள்" என்றாள் கலாவதி.

"அம்மா, தாங்களா எனக்கு உதவி செய்தது?" என்றாள் காந்தி. ஆச்சரியமும் அடக்கமும் கலந்து தெரிந்தன அவள் முகத்தில்.

"உன் பெயர் என்ன?"

"காந்திமதி."

நிர்வாகி ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்தாள். அதில், "காந்திமதி, ரூ. 35 மாதச் சம்பளம்; அலவன்ஸ் ரூ. 16" என்று எழுதினாள்.

"வேணி தன் சிபாரிசுக் கடிதத்தைக் கசக்கிக்கொண்டே தலை குனிந்தபடி வெளியே போனாள்.

ஜக்கு

'ஆர்வி'

நாடகம் நடந்தது...

"அடேடே, நம்ம எதிர்வீட்டுக் குழந்தையா? நான் யாரோன்னுல்லே பயந்து போய்த் தடியைத் தூக்கிக்கிட்டு ஓடிவரேன்!" என்றான் தோட்டக்காரன்.

ஜக்குவுக்கு அப்பொழுது தான் நல்ல மூச்சு வந்தது. "நல்ல காலம். யாரோ என்னமோன்னு ஓங்கின தடியை மண்டையிலே போடாமே இருந்தயே" என்று சொல்லிவிட்டு மாடியை அடைந்தான். ஒரே இருட்டாய் இருக்கவே விளக்கைப் போட்டான்.

தலையணை ஒரு பக்கம் தலை ஒரு பக்கமாய்ப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான் நந்து. ஜக்கு அவனை எழுப்பவில்லை. படபடவென்று காற்றில் ஏதோ பறக்கவே அவன் பார்வை மேஜைமீது சென்றது. ஜக்கு உடனே அதைக் கையில் எடுத்துப் பார்த்தான்.

நாடகத்தின் கையெழுத்துப் பிரதி அது. நந்து நடிக்கவேண்டிய பகுதிகள் அடங்கியிருந்தன அதில். அந்த ஹாஸ்ய நாடகத்திலே நந்துவுக்கு ஒரு பட்டிக்காட்டுப் பையனாக நடிக்க வேண்டிய பாகம். ஜக்கு சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்தான். ஏனென்றால் அந்தக் கையெழுத்துப் பிரதியை நந்து பார்த்திருக்க மாட்டான் என்ற சந்தேகம் அவனுக்கு உடனே உண்டாயிற்று. கையெழுத்துப் பிரதியைச் சுருட்டிக் கொண்டு வந்து வைத்திருப்பதால் அது பிரியாமல் அப்படியே இருந்தது. கை வேர்வைகூடக் காயவில்லை.

ஜக்குவுக்கு மின்வெட்டென ஒரு யோசனை உதித்தது. 'எப்படியிருந்தாலும் இருக்கட்டும் - நந்து பார்த்திருந்தாலும் சரி, பார்க்காமல் இருந்தாலும் சரிதான்!' என்று சொல்லிக்கொண்டான். அந்தக் கையெழுத்துப் பிரதியைக் கையில் சுருட்டி எடுத்துக்கொண்டு விளக்கை அணைத்தான். மடமடவென்று வந்த வழியே திரும்பிவிட்டான்.

வரும்போது தெருவிளக்கடியில் நின்றுகொண்டிருந்தவனை இப்போது காணவில்லை. மெதுவாக வீட்டுக்குள் நுழையப் போகும் சமயம். பங்களா காம்பவுண்டுக்கு வெளியே கசமுச என்று பேச்சுக் குரல் கேட்டது. ஜக்கு ஓரமாய்ப் போய் நின்று காதைத் தீட்டிக் கொண்டான்.

"டேய் உல்ப், அவன் மேஜைமேலே வச்சுட்டு வந்துட்டேன்டா!" என்முன் சோனிக் கபாலி.

"அது சரிடா, யாரோ நீ போன பிறகு அங்கே வந்தாப் பலே இருந்ததே, அது யாரு?" என்று கேட்டான் உல்ப்.

"நல்ல வேளை! நீ தோட்டக்காரன்கிட்டே பேச்சுக் கொடுக்காமெ இருந்திருந்தால் நான் தெரியாமெ திரும்பி யிருக்க முடியாது!" என்முன் சோனி.

"அட சீ! நான் எங்கேடா தோட்டக்காரன் கிட்டே போய்ப் பேசினேன்! நான் அதோ அந்த விளக்குக் கம்பத்துக்குக் கிட்டேன்னு நின்னேன்."

"அப்போ நீ இல்லையா பேசினது?"

"ஊஹூம்."

"சரி; யாராய் இருந்தா நமக்கென்ன? எப்படியோ வந்துட்டோம் வெளியிலே. ஆமாம்; நந்து படிக்காமல் இருந்துட்டு, நடிக்கமாட்டேன்னு சொன்னு?" என்று கேட்டான் சோனி.

"அட, உனக்கேன்டா அந்தக் கவலை? நாளைக்குப் பள்ளிக்கூடம் திறந்தா அந்தப் பயல் கிளாஸுக்கு வந்துதானே ஆகணும்! அதனுலே நிச்சயம் அவன் 'ஆக்ட்' பண்ணுறு இல்லையான்னு நீயே பார்! கதறிண்டு 'ஆக்ட்' பண்ணச் சொல்றேன், பார்!" என்முன் உல்ப்.

அவ்வளவுதான் ஜக்குவுக்குக் கேட்டது. பிறகு அவர்கள் போய்விட்டார்கள். ஜக்கு தன் அறைக்குள் நுழைந்தான். முதலில் போட்ட பிளான் படியே விளக்கைப் போட்டுக் கொண்டு ஒரு தடவை எல்லாவற்றையும் படித்தான். இதை நந்து நடித்தானே அவ்வளவுதான்; எல்லாரும் அவனைப் பட்டிக்காட்டு ஏமாளி என்று பரிகாசம் செய்வார்கள். அதுகூடப் பரவாயில்லை. அந்த ஏமாளியாக ஜக்குவையே வைத்துக்கொண்டுதான் எழுதியிருக்கிருர்கள்.

'நந்துவைப் போய்ச் சந்தேகித்தேனே, பாவம்! அவனுக்கும் எனக்கும் மனஸ்தாபம் ஏற்படுத்த இந்தப் பயலுகள் எவ்வளவு சூழ்ச்சிகள் செய்திருக்கிருர்கள்! இவர்களைப் பதிலுக்குப் பதில் அவமானப்படுத்தாவிட்டால் நான் ஜக்கு இல்லை' என்று மார்பைத் தட்டிக் கொண்டான். பேனவும் காகிதமும் எடுத்து வைத்துக்கொண்டு எதையோ எழுதுவதில் ஒரே மூச்சாக ஈடுபட்டான். அவன் அன்று தூங்க ஆரம்பித்த போது சரியாகக் கிழக்கு வெளுத்துவிட்டது.

காலையில் நந்து அவனைப் புரட்டிப் புரட்டி எழுப்பி, "என்னடா, இன்னும் தூங்குகிருய்?" என்முன். ஜக்கு கண் விழித்ததும் நந்துவின் கையைப் பிடித்துக் கொண்டு, "நீதாண்டா உண்மைச் சிநேகிதன். உன்னைப் போய் நான் சந்தேகப்பட்டேனே. என்னை மன்னிச்சுட மாட்டாயா?" என்று கேட்டான்.

நந்துவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஜக்கு அவனிடம் இரவு நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னான். கடைசியாக, "நந்து, நந்து! நான் சொல்கிறபடி கேட்டயோ அவனுக முகத்தில் கரியைப் பூசலாம்! என்ன சொல்றே?" என்றான் ஜக்கு.

"ஓ, நான் ரெடி!" என்றான் நந்து.

ஜக்கு குதிகுதியென்று குதித்தான். பிறகு எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று அரைமணி நேரம் போலத் திட்டம் போட்டார்கள். நந்து எழுந்து போகும்போது, "நீ கவலைப்படாதேடா, ஜக்கு! நான் பாத்துக்கறேன்!" என்று சொல்லிவிட்டு ஜக்கு கொடுத்த கையெழுத்துப் பிரதிகளுடன் வீட்டுக்குச் சென்றான்.

மத்தியான்னம் ஜக்கு வாசற்படியில் உட்கார்ந்து மாமிக்கு விளையாட்டுச் சினிமா காட்டிக்கொண்டிருந்தான். ஒரு சேமியா அட்டைப் பெட்டியின் நடுவில் காலணா அளவுள்ள பூதக் கண்ணாடியைச் செருகியிருந்தான். பின்புறத்து அட்டையில் ஒரு பிலிம் அள


சங்கர்...

வுக்குச் சதுரமாய் வெட்டிப் பிலிம் சுருளை மாட்டியிருந்தான். எதிரே நாலுபுறமும் நீலத் துணியால் மறைத்த இருட்டறை. நடுவில் படம் விழும்படி ஒரு வெள்ளைத் துணி. பூதக் கண்ணாடியில் சூரிய பிம்பம் விழும்படி வெயிலில் ஒரு கண்ணாடியைச் சாய்த்து வைத்தான். அவ்வளவுதான்; எதிரே படம் பெரிதாகத் தெரிந்தது. ஆனால் சிறிது மங்கலாகத்தான் இருந்தது.

மாமி இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். "எல்லாம் சரிதாண்டா, ஜக்கு! பிலிமைத் தலைகீழாக வச்சிருக்கயே?" என்றாள்.

"இல்லாட்டா படம் தலைகீழாக விழும், மாமி!" என்றான் ஜக்கு. அவன் திரும்பிப் பார்த்த போது உல்பும் சோனியும் நந்துவின் வீட்டுக்குள் நுழைவது தெரிந்தது. நந்து மாடியில் தன் அறையில் நின்றுகொண்டு, ஜன்னல் வழியாக ஜக்குவுக்கு மட்டும் தெரியும்படி கையை வீசிக் காட்டினான். அதற்கு அர்த்தம் என்னவென்றால், 'எல்லாம் ரெடியாகிவிட்டது' என்பதுதான். ஜக்கு மறுபடி விளையாட்டுச் சினிமா காட்டுவதில் ஈடுபட்டான். மாமிக்கு அவன் ஒவ்வொன்றையும் விளக்கிக் காட்டினான். "பாட்டரி விளக்கை எடுத்துக் கோயேன்" என்றாள் மாமி. "அந்த வெளிச்சம் போராது மாமி" என்றான் ஜக்கு.

அப்போது மணி மூன்று. நந்து, உல்ப், சோனி மூவரும் ஜக்குவைப் பார்க்க வந்தார்கள்.

"அடே ஜக்கு! நாங்கள் எல்லாரும் சேர்ந்து இன்னிக்கு எங்க 'கிளப்'பிலே ஒரு டிராமா போடப்போகிறோம். நீ அதற்கு அவசியம் வரணும். வரதோடுமட்டுமல்ல; கொஞ்சம் 'ஹெல்'பும் செய்யணும்" என்றான் நந்து.

ஜக்கு ஒன்றுமே தெரியாதவனைப் போல, "டிராமாவா? அடேடே! நீயும் அதிலே 'ஆக்ட்' பண்ணப்போறயா? டேய், சொல்லவேயில்லையே நீ!" என்றான்.

"ஆக்ட் பண்ணப்போறானா? அவனுடைய பாகத்தையெல்லாம் தலைகீழாக்கூடச் சித்தே முந்தி 'ஆக்ட்' பண்ணிக் காட்டிப்பிட்டான். இல்லையாடா, உல்ப்?" என்று கூவினான் சோனி.

"உனக்குக்கூட ஒரு பார்ட் கொடுத்திருப்போம். ஆனா நீ ஊருக்குப் போயிடுவேயோ என்னமோன்னு கொடுக்கல்லே" என்றான் உல்ப்.

'உல்ப்' என்றால் அசல் 'உல்ப்' மாதிரிதான் அவன் இருந்தான். அவன் செம்பட்டை மயிரும், பூனைக் கண்ணும், புலிப் பல்லும்...!

ஜக்கு அவனை மனசுக்குள் கறுவிக்கொண்டே, "நான் அவசியம் வரேன். அஞ்சு மணிக்குத்தானே? நாலரை மணிக்கே வந்துடறேன்! போதுமா?" என்றான்.

மணி நாலரை என்றால் டாண் என்று நாலரை மணிக்கெல்லாம் ஜக்கு 'கிளப்'பில் ஆஜரானான்.

சிறிசும் பொடிசுகளுமாய் முன் வரிசையில் பத்துப் பதினைந்து குழந்தைகள்மட்டும் தான் இருந்தார்கள். நந்து "கிரீன் ரூமி'லிருந்து வெளியே எட்டிப் பார்த்து, "அடேய் ஜக்கு! அடேய்! இங்கே வாயேன்!" என்று கூப்பிட்டான். அப்போது அவனோடு உல்பும்கூட இருந்தான்.

"வந்து - நீ 'ஹெல்ப்' பண்ணணும்னு மத்தியானமே சொன்னேனேல்லியோ? நீ பாட்டுக்கு நின்னிண்டிருந்தால் என்னடா அர்த்தம்?" என்று கோபித்துக்கொண்டான் நந்து. கோபத்தினால் அவன் முகம் நிஜமாகவே சிவந்து கொடுத்தது.

"பின்னே என்னடா பண்றது? ஒரு வேலையும் எனக்கு இல்லையே?" என்றான் ஜக்கு.

"என்னடா இது? வேலையா இல்லே? இதோ பார், டிக்கட் விற்கிறது! அதுவே வேண்டாம்; 'கேட்'டிலே நில்லேன். பிரஸ், காம்ப்ளிமெண்டரி பாத்து உள்ளே விட்டு, டிக்கட்டைச் சோதனைபண்ணி அனுப்பக் கூடாதா? இதுலே என்னடா அகௌரவம் வந்துடும் நமக்கு?" என்றான் நந்து.

"சரி இவ்வளவுதானே? அகௌரவத்துக்காகச் சொல்லல்லேடா. ஏதாவது தப்பு வந்துடுத்துன்னா?"

"அப்படி வந்தா வந்துட்டுப் போகட்டும். இந்த வசூலையெல்லாம் நம்பதானே எடுத்துக்கப் போறோம். ஒண்ணு ரெண்டு போனாத்தான் போயிட்டுப் போகட்டுமே" என்றான் நந்து.

உல்ப் பேசுவதற்கே அவர்கள் இடம் கொடுக்கவில்லை. முதல் மணி அடித்தாகிவிட்டது! ஜக்கு 'கேட்'டுக்கு ஓடினான். ஒரு பத்துப் பதினைந்து ஓரணா டிக்கட்டுகள் விற்பனையாகி

யிருந்தன. வெளியில் பையன்களுடைய கூட்டம். ஒன்றிரண்டு பெரியவர்கள் குழந்தைகள் நடிக்கப் போவதைப் பார்க்க வந்தார்கள்.

இரண்டாவது மணி அடித்தாகிவிட்டது!

புக்கிங் கவுண்டரில் டிக்கட்டே விற்பனை ஆகவில்லை. 'உல்ப்' மட்டும் உள்ளே போய் விநாடிக்கு ஒரு தடவை, "எவ்வளவடா விற்றது? எவ்வளவு விற்றது?" என்று கேட்டுக்கொண்டிருந்தான். விற்பனை முதலில் ஆனதுதான். பிறகு ஆகவேயில்லை. ஆனால் உள்ளே நேரம் ஆக ஆகக் கூட்டம் மட்டும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

"என்னடா விற்பனை இல்லேங்கறே? இடமே போருது போலிருக்கேடா கூட்டம்?" என்று 'புக்கிங் கிளார்க்' பையனிடம் வந்து உறுமினான் உல்ப்.

"என்னமோ தெரியல்லியே!" என்று அந்தப் பையன் கையை விரித்துவிட்டான்.

டண், டண், டண்......மூன்றாவது மணி!

உல்ப், கிரீன் ரூமுக்குப் போய்விட்டான், வேஷம் போட்டுக்கொள்ள. அவனுக்கு ஹெட்மாஸ்டர் வேஷம்! மணி ஐந்தேகால் ஆகியும் ஸீன் இழுக்கவில்லை. கூட்டம் நெரிசலாய் இருந்தது. ஒரே விசில் சத்தமும் சிரிப்பும் கை தட்டலும் ரகளைப்பட்டன.

இதற்குள் கோரஸ் ஆரம்பமாயிற்று. இருந்தாற்போல் இருந்து வாசல் கேட் அப்படியே திறந்துகொண்டது. அணை உடைந்து வரும் வெள்ளம்போல வெளியில் நின்ற அத்தனை பேரும் டிக்கட்டே வாங்காமல் உள்ளே நுழைந்து விட்டார்கள். இதைக் கேள்விப்பட்ட 'உல்ப்' தன்னை மறந்து பாதி வேஷத்துடன் வெளியில் வந்து, "ஜக்கு, ஏ ஜக்கூ!" என்று கர்ஜித்தான். பையன்கள் எல்லாரும் 'கொல்' என்று சிரித்துக் கேலி செய்யவே அவமானம் தாங்காமல் அவன் உள்ளே போய்விட்டான். ஜக்குவோ கதவைத் திறந்துவிட்டு ஒரு கோடியில் நின்று சிரித்துக்கொண்டிருந்தான். இதற்குள் ஸீன் இழுத்தாயிற்று.

முதல் ஸீனில் பட்டிக்காட்டு ஏமாளியைக் கூப்பிட்டு ஹெட் மாஸ்டர், "அடே ஏமாளி, எந்த ஊரடா உனக்கு?" என்று கேட்க வேண்டும். பட்டிக்காட்டுப் பையன், "அடைஞ்சான் மடம், ஸார்" என்பான். உடனே இந்தப் பதிலைக் கேட்டு தந்திரக்காரப் பையனாக நடிக்கும் சோனியும் அவன் கோஷ்டியும் கைதட்டிக் கேலி செய்யவேண்டும். பட்டிக்காட்டான் தலையைச் சொறிந்துகொள்வான்.

முதல் ஸீன் ஆரம்பமாயிற்று.

ஹெட்மாஸ்டர்: அடே ஏமாளி, எந்த ஊரடா உனக்கு?

பட்டிக்காட்டு ஏமாளி: நீங்க பிறந்த ஊருதான், ஸார்!

ஹெட்மாஸ்டர் இதைக் கேட்டுத் திருதிருவென்று விழித்தார். தந்திரக்காரப் பையன் தலையைச் சொறிந்துகொண்

டான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தார்கள். சபை கலகலத்துப் போய்விட்டது. "அடே, ஹெட்மாஸ்டர் 'டயலாக்'கைக் கோட்டை விட்டுட்டாருடோய்!" என்று ஒரு மூலையிலிருந்து சத்தம் வந்தது. "ஆமாண்டோய்!" என்று பதில் ஆரவாரம் எழுந்தது. ஒரே கலாட்டாதான்! ஸீனே அத்துடன் மூடிவிடும்படியாகி விட்டது.

ஸீனுக்குப் பின்புறம் 'உல்ப்' ஆத்திரத்துடன் நந்துவிடம் உறுமினன்: "என்னடா இது! நாங்க கொடுத்த பாடத்தைப் பேசாமல் வேறு என்னமோ வந்து பேசறே?"

சோனி நடுவில் குறுக்கிட்டு, "மத்தியான்னம் நடந்த ஒத்திகையில் சரியாய்ச் சொன்னயே; இப்ப மட்டும் என்ன தம்பி? இது என்ன ரிஹர்சலா?" என்ருன்.

"டேய், எனக்கு மறந்து போயிடுத்துடா! சரி சரி; அடுத்த ஸீனிலே பாரேன்" என்ருன் நந்து.

அடுத்த ஸீன் என்ன? இரவு முழுவதும் விழித்து ஜக்கு எழுதியதை நந்து பேசலானன். எல்லாமே தலைகீழ்ப் பாடமாய் இருந்தது. சோனியும் உல்பும் ஆத்திரம் தாங்கமாட்டாமல் குதித்தார்கள். "போடா போ! டிராமா நன்ன யிருக்கவேண்டியதுதானே? நான் என்ன பேசின உனக்கென்ன?" என்ருன் நந்து.

"டிராமா ரொம்ப ஜோராய் இருக்குன்னு எல்லாரும் பேசிக்கருடா - நீ உன் இஷ்டப்படியே பேசுடா!" என்ருன் ஜக்கு உள்ளே வந்து. அவன் முகத்தில் குறும்புத்தனம் கூத்தாடியது.

உல்ப் ஒரே பாய்ச்சலாக மேடையில் ஸீனுக்கு முன்பாக வந்தான். "சகோதரர்களே! இத்துடன் ஹாஸ்ய நாடகம் முடிந்துவிட்டது" என்று கூறிவிட்டு ஒரு மூலையில் போய் உட்கார்ந்து விசித்து விசித்து அழுதான். வெளியே தாங்க முடியாத கூச்சலும் அட்டகாசமும் மேடையைப் பிளந்தன; "டிக்கட் பணத்தைத் திருப்பிக் கொடு!" என்ற கூக்குரல்!

பிறகு என்ன நடந்தது தெரியுமோ? ஜக்கு மேடையில் தோன்றினன். "அந்த ஹெட்மாஸ்டருக்கு மாற்றலாகிவிட்டது. இனி அடுத்த ஸீன் முதல் புது ஹெட்மாஸ்டர் வரப் போகிருர்" என்று சொல்லி விட்டு உள்ளே சென்ருன். சபை ஓய்ந்தது.

டிராமா அன்றைக்குப் பிரமாதத்திலும் பிரமாதமாய் நடந்து முடிந்தது என்பதற்குக் கேட்பானேன்!

'ஜக்குவுக்கு - ஜே!'

'நந்துவுக்கு - ஜே!' என்ற கோஷத்துடன் நாடகம் இனிது முடிந்தது.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(C)21. சந்திரசேகரன், K.V., புனா. (D) 10. தனலக்ஷ்மி, த., இலங்கை. 11. தக்ஷிணாமூர்த்தி, M., ஒட்டபாளையம். 12. தாமோதரன், T., சோளிங்கபுரம். 13. துரைராமு, S., தாமரைக்குளம். 14. துரைசாமி, V., ரங்கசாமி, K., வடகுப்பட்டி. 15. தேவதாசன், செ., காரைநகர். 16. திவான் முத்துமுகமத், M. S., சிவகங்கை. 17. தேவதாஸ், திருவண்ணாமலை. 18. தனுஷ்கோடி, ஏ.வி., சென்னை-2. 19. தேவராஜ், B., பாப்பநாயக்கன்பாளையம். 20. தண்டாயுதபாணி, G., அதிராமபட்டினம். 20 தேவராஜு, எம்., அடையாறு. (G) 14. கணபதி, பா., சிதம்பரம். 15. குருநாதன், C., சூலூர். 16. குருநாதன், (ஊர் எழுதவில்லை). 17. கோவிந்தராஜன், T., வேலூர். 18. கோபாலகிருஷ்ணன், K., கணேசன், K., மீனாக்ஷி, K., மதுரை. 19. கோபாலகிருஷ்ணன் R., மதுரை. 20. கோபாலன், ஆ., மாதுங்கா. 21. கோபால்ராஜன், A. S. C. S., தூத்துக்குடி. 22. கோபாலகிருஷ்ணன், நா., சங்கரன்கோயில். 23. கோபாலன், G., உடுமலைப்பேட்டை. 24. கோவிந்தம்மாள், அ., ராஜபாளையம். 25. கோபால், P., புதுக்கோட்டை. 26. கணேசன், T., ஆண்டிப்பட்டி. 27. கோவிந்தசாமி, K., சூளை. 28. கோபாலன், K., அல்சூர், பெங்களூர். 29. காந்திமதிநாதன், S., ஆலப்புழை. (H) 7. ஹாரூன், H., ஷேக் முகமத், H., வண்ணாரப்பேட்டை. 8. ஹாஜிமுகமத், மு., ஆயர்பாடி. 9. ஹுசேன், A. M., கண்டி (I) 3. இந்திரா, K. சுசீலா, K. லலிதாநகர், சென்னை-4. இந்திரா, S., கல்கத்தா. (J) 11. ஜகதீசன், ச., பசுவந்தனை. 12. ஜகதீசன், C., சோளிங்கபுரம். 13. ஜல்மா, D., மயிலாப்பூர். 14. ஜனார்த்தனம், D., நாகப்பட்டினம், 15. ஜயராமன், B. K., சேப்பாக்கம். 16. ஜயராமன், S., சுப்புலக்ஷ்மி, S., அறந்தாங்கி. 17. ஜியாவுத்தீன், A. M., ஈரோடு. 18 ஜயராம், K., கோபாலன், K., சென்னை-4. 19. ஜகதீசன், V., ஆண்டிப்பட்டி. 20. சம்பகலக்ஷ்மி, K. R.. வேங்கடேசன், K. R., மேட்டூர் டாம். 21. ஜயம், S., நடராஜன், S., மிலட்டூர். 22. ஜகந்நாதன், B., திருமயம். 23. ஜான்மாணிக்கராஜா, ஐசக், ஜோஸப், எ.ஜா. திருவிளையாட்டம், 24. ஜயா, கோமா, சங்கரன்,

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

ஜூன் '50   கூபன் செ.

கான்பூர். 25. ஜயராமன், K., திருநெல்வேலி. 26. ஜகதலதா, எஸ். வி., பம்பாய். 27. ஜகந்நாதன், R., திருவான்மியூர். (K) 33. கலாநாயகி, T. P., பம்பாய். 34. கதிர்வேலு, K., சோளிங்கபுரம். 35. கண்ணன், இந்தூர். 36. கண்ணபிரான், வ., சென்னை-2. 37. கந்தசாமி, ந., யாழ்ப்பாணம். 38. கஜேந்திரன், K., தளவாய்ப்பட்டி. 39. கந்தசாமி, N., கோயம்புத்தூர். 40. கண்ணன், D., திருவல்லிக்கேணி. 41. கஸ்தூரிரங்கன், S., தஞ்சாவூர். 42. கனகசபாபதி, V., பூவிருந்தவல்லி. 43. கக்கப்பன், P.K., மேலூர். 44. கல்யாணராமன், A., ஜயராமன். R., பொறையாறு. 45. கண்ணன், N.S., கவரிமங்கலம். 46. கந்தசாமி, S.R., சென்னை-1. 47. கந்தமூர்த்தி, ச., புதுவை. 48. கண்ணன், D., ஸ்ரீநிவாசன், P., சோளிங்கபுரம். 49. கண்ணன், N., தாயுமானவன், S., ஜலகண்டபுரம். 50, காஜா, N., திருவல்லிக்கேணி. 51. காம்ராஜ் பாண்டியன், P., மதுரை. 52. கிருஷ்ணசாமி, C.R., மயிலாப்பூர். 53. கிரிஜா, C., மயிலாப்பூர். 54. கிருஷ்ணமூர்த்தி, N., திருவனந்தபுரம். 55. கிருஷ்ணமூர்த்தி, S. K., திருவள்ளூர். 56. கிருஷ்ணமூர்த்தி, V., ஸ்ரீரங்கம். 57. கிருஷ்ணன், K. N., சோளிங்கபுரம். 58. கிருஷ்ணராசன், R. M., திருப்பத்தூர். 59. கிருஷ்ணமூர்த்தி, V., சுப்ரமணியன், V., சென்னை-1. 60. குமார், K. A. M., குன்னத்தூர். 61. குமார், பெ. தல., மயிலாப்பூர். 62. கிருஷ்ணன், K., லக்ஷ்மி, K., கல்லிடைக்குறிச்சி. 63. குமார், C. V., பாலு, C. V., சென்னை-16. 64. குப்புசாமி, ரா., குளித்தலை. 65. கைலாசம், M., ஜகதீசன், M., பரமசிவம், M., பாபநாசம். 66. கண்ணன், S., மதுரை. 67. கன்யாகுமரி, V.S., சென்னை. 68. கண்ணன், N., ஆலப்புழை. 69. காதர்மொஹைதின், A. K., ஏர்வாடி. 70. குழந்தைவேல், A., கோயம்புத்தூர். 71. கிருஷ்ணமூர்த்தி, L., ராஜேசுவரி, மீனாக்ஷி, L., தஞ்சாவூர். 72. கண்ணன் S., S., புஷ்பா, S. S., நுங்கம்பாக்கம். 73. கனகவல்லி, S., மயிலாப்பூர். 74. காம்ராஜ், S., ஆண்டிப்பட்டி. 75. கிருஷ்ணன், S.G., சோளிங்கபுரம். 76. கந்தசாமி, S., புதுச்சேரி. 77. கமலகுமாரி, வே., கரவெட்டி, இலங்கை. 78. கிருஷ்ணமூர்த்தி, ஓ. ஜி., திருக்காட்டுப்பள்ளி. 79. கிருஷ்ணன், B., பம்பலப்பிட்டி. 80. குமரவேலு, N., சாயிசந்திரன், N., ராயப்பேட்டை. 81. கமலா, S., ராதா, S., டில்லி. (L) 15. லலிதா, T. G., தம்மனூர். 16. லக்ஷ்மணன், வெ. நா., சென்னை-8. 17. லக்ஷ்மணன், V., மேளமேடு.

(மீதி அடுத்த இதழில் வரும்.)

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

மாதந்தோறும்

இங்கிலீஷ் 1-ஆம் தேதி

வெளிவரும்

★★★★★★★★★★★★★★★

மணியின் கனவு

ஜி. ஜயராமன்

"அப்பா! இன்னிக்கு என்னைப் பீச்சுக்கு அழைச்சிண்டு போகமாட்டாயா?" என்றான் மணி.

"போடா! உனக்கு வேறு வேலை இல்லை? ஒரு நாள் பார்த்தாப்போலே சினிமா, ஸர்க்கஸ், பீச்சு எங்கேயாவது போய்க்கொண்டே இருக்கணுமா என்ன? இன்னிக்கு உன்னை எங்கேயும் அழைத்துக் கொண்டு போகமாட்டேன்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார் அப்பா. அதற்கு மேல் அவரிடம் பேசுவதில் பலனில்லை என்பதை அறிந்த மணி, தோட்டத்திற்குச் சென்று அங்கிருந்த வேப்ப மரத்தடியில் உட்கார்ந்தான். அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களை இறுக மூடிக்கொண்டான். மூடியிருந்த கண்களிலிருந்து கண்ணீர் முத்து முத்தாக வழிந்தது.

எவ்வளவு நேரம் அப்படி இருந்தானோ தெரியாது. "மணி" என்று யாரோ கூப்பிடுவதைக் கேட்டு மணி திரும்பிப் பார்த்தான். அவனுக்குப் பின்னால் ஒட்டுப் போட்ட பாவாடை, சொக்காயுடன் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். அவள் பெயர் காவேரி. அவளுக்கு மணியைக் கண்டால் ரொம்பப் பிடிக்கும். அடுத்த வீட்டில் தான் இருந்தாள். அவள் மணியைப் பார்த்து, "மணி, நீ என்னத்துக்கு அழறே?" என்று கேட்டாள்.

மணி அழுதுகொண்டே, "அப்பா என்னை எங்கேயும் அழைச்சிண்டு போகமாட்டேங்கிறார். பீச்சுக்கு அழைச்சிண்டு போன்னா திட்டுகிறார்" என்று சொன்னான். "இதுக்குத்தானா அழறே? வா; நான் அழைச்சிண்டு போறேன்" என்றாள் காவேரி. மணியும் உடனே கிளம்பிவிட்டான்.

வேறு ஆடைகளணிந்து கொண்டு அவர்கள் இருவரும் கடற்கரையை அடைந்தார்கள். பரந்து கிடக்கும் மணலையும் அலை மோதும் நீலக் கடலையும் பார்க்கப் பார்க்க அவர்களுக்கு அளவு கடந்த ஆனந்தம் ஏற்பட்டது. சிறிது நேரம் இருவரும் மணலில் விளையாடினார்கள். பிறகு மணலில் கிடந்த கிளிஞ்சல்களை மணி பொறுக்க ஆரம்பித்தான். காவேரி சிறிது தூரத்தில் நின்றுகொண்டு, கடலில் அலைகள் கிளம்பிக்

கரையில் மோதிவிட்டுச் செல்லும் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று மணி, "காவேரி, காவேரி! சீக்கிரம் இங்கே பாரேன்" என்று கூப்பிடுவதைக் கேட்டுக் காவேரி திரும்பிப் பார்த்தாள். மணியின் கையில் பளபளவென்று மின்னும் ஓர் அழகான மோதிரம் இருந்தது. காவேரி அதை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டு நின்றாள். "என்ன காவேரி, இப்போ இதை என்ன பண்றது?" என்றான் மணி.

"யாராவது இந்த மோதிரத்தின் சொந்தக்காரர் இங்கே இருந்தால் கொடுத்துடலாம். ஆனால் ஒருத்தரும் இல்லையே" என்றாள் காவேரி.

"அப்படியானால் இதை அப்பாகிட்டக் கொண்டு போய்க் கொடுத்துடுவோம். அவர் என்ன வேணுமானாலும் பண்ணிக்கொள்ளட்டும்" என்றான் மணி. சரி என்று இருவரும் வீட்டுக்குக் கிளம்பினார்கள்.

வழியில் ஒரு தோட்டத்தில் பல மாம்பழங்கள் பழுத்துத் தொங்கிக்கொண்டிருந்தன. தோட்டத்தைச் சுற்றி முள் வேலி போட்டிருந்தது. உள்ளே போக வழியே இல்லை. ஆனால் மணிக்கும் காவேரிக்கும் அந்த மாம்பழங்களை எப்படியாவது தின்று

விட வேண்டுமென்று ஆசை ஏற்பட்டது. மரத்தை அண்ணாந்து பார்த்தான் மணி. அங்கே ஒரு குரங்கு உட்கார்ந்துகொண்டு மணியைப் பார்த்து இளித்தது. மணியின் ஆசை அவனை விடவில்லை. "ஏ குரங்கே, எனக்கு நாலு பழம் போடேன்" என்றான் மணி. உடனே மரத்திலிருந்து பழங்கள் பொத்துப் பொத்தென்று விழத் தொடங்கின. மணியும் காவேரியும் அவற்றை எடுத்துத் தின்றார்கள். அவ்வளவு ருசியான பழத்தை அவர்கள் அதுவரை தின்றதே இல்லை. "குரங்கே, குரங்கே! இன்னும் இரண்டு பழம் போடு" என்றான் மணி. குரங்கு இன்னும் இரண்டு பழம் போட்டது. பழத்தை எடுப்பதற்காகக் குனிந்தான் மணி. அவன் சட்டைப் பையிலிருந்து மோதிரம் தவறிக் கீழே விழுந்துவிட்டது. திடீரென்று மேலே இருந்த குரங்கு, 'உர் உர்' என்று உறும ஆரம்பித்தது. இத்தனை நேரமும் சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த நாய் ஒன்று வள் வள் என்று குரைத்துக்கொண்டே அவர்களைத் துரத்தியது. மணி சட்டென்று மோதிரத்தை எடுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தான். ஆனால் என்ன ஆச்சரியம்! மணி மோதிரத்தைக் கையில் எடுத்ததுதான் தாமதம்; அதுவரையில் அவனைத் துரத்தி வந்த நாய் வாலை ஆட்டிக்கொண்டே அவனிடம் வந்தது. குரங்கைத் திரும்பிப் பார்த்தான் மணி. சற்றுமுன் அவனை நோக்கி உறுமிய குரங்கு இப்பொழுது அவனைப் பார்த்துப் பல்லை இளித்தது. "மணி, இப்போ உன் கிட்டேயிருக்கிறது மந்திர மோதிரம் போலிருக்குடா! இது கையிலே வந்ததும் குரங்கும் நாயும் எப்படி அடங்கிடுத்து!" என்று குதித்தாள் காவேரி. மணிக்கு ஒரே சந்தோஷம். குதித்துக்கொண்டே நடந்தார்கள் இருவரும்.

சிறிது தூரம் சென்றதும் எதிரே சில பையன்கள் வருவதைப் பார்த்தான் மணி. எதிரே வந்த பையன்கள் மணியோடு அவன் வகுப்பில் படிப்பவர்கள். வகுப்பில் எல்லாருக்கும் அந்தப் பையன்களைக் கண்டால் பயம். மணிக்கும் அவர்களுக்கும் எலிக்கும் பூனைக்கும் உள்ள உறவுதான். "டேய் சங்கு! அதோ மணி வரான் பாத்தயா" என்றான் சுண்டு. "வரட்டுமேடா. என்ன பயம்?" என்றான் சங்கு.

"அதுக்கில்லேடா! முன்னெல்லாம் நம்மைக் கண்டாலே நாலு மைல் ஓடுவானே, இன்னிக்கு மாத்திரம் சிப்பாய் மாதிரி நம் எதிரிலேயே வரானேன்னுதான் சொன்னேன்" என்றான் சுண்டு. "அட போடா பயங்கொள்ளி! வந்தான்னா வகையா மாட்டிக்

கிறுன். நமக்கென்ன? என்னடா சொல்லறே? என்னமோ முழிக்கறையே. பயமாயிருந்தா நீ வரவாண்டாம்பா" என்றுன் சங்கு. "டேய் மட்டி! நான் என்ன செய்கிறேன் என்று இதோ பார்" என்று சங்கு சாலையில் ஒரு மூலையைக் காட்டினுன். அங்கே ஓர் ஆலமரத் தடியில் ஒருகழுதையைக் கட்டியிருந்தது. சுண்டு சங்குவின் காதோடு ஏதோ சொன்னுன். இருவரும் சிரித்துக்கொண்டே மரத்தின் பின்னுல் போய் ஒளிந்துகொண்டார்கள். சில நிமிஷங்களுக்கெல்லாம் மணி அந்த இடத்துக்கு அருகில் வந்தான். சங்கு அவசர அவசரமாகக் கழுதையை அவிழ்த்து விட்டான். ஆனுல் அவன் எதிர்பார்த்ததற்கு மாருகக் கழுதை இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. சங்கு ஆத்திரத்துடன், "சீ கழுதை! ஓடு" என்று சொல்லிக்கொண்டே கழுதையின் வாலைப் பிடித்து முறுக்கினுன். உடனே கழுதை தன் பின்னங் கால்களால் ஓர் உதை கொடுத்தது. "ஐயோ சுண்டு! இதைப் பாரேன்" என்று கத்தினுன் சங்கு, கழுதையின் வாலை விடாமலே. அதே சமயம் மரத்திலிருந்து கால் தவறிக் கழுதையின் மேல் குதித்தான் சுண்டு. திடீரென்று தன்மேல் ஏதோ கனமான வஸ்து விழுந்ததைக் கண்டு பயந்த கழுதை பலமாகக் கத்திக்கொண்டே நாலு கால் பாய்ச்சலில் ஓட ஆரம்பித்தது. சுண்டு சாமர்த்தியமாகக் கழுதையின் கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். சங்கு அதன் வாலைப் பிடித்துக் கொண்டான். கழுதை அதிவேகமாக ஓட ஆரம்பித்தது. பாதி ஓடியும் பாதி ஊர்ந்தும் அதோடு போனுன் சங்கு. கழுதையின் கூச்சலைப் பொறுக்க முடியாமல் பல நாய்கள் குரைத்துக்கொண்டே அவர்களைப் பின் தொடர்ந்தன. "சிப்பாய்ங்க ரெண்டு பேரும் வெள்ளி மூக்குக் குதிரை மேலே சவாரி பண்ணிக்கொண்டு வராங்க டோய்!" என்று கத்தினுன் ராமு. பையன்கள் எல்லாரும் 'ஹோ' என்று சத்தம் போட்டுச் சிரித்தார்கள். மணிக்கு இந்தக் காட்சியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. காவேரி இந்தக் கழுதையின் பின்னுல் வர முடியாது என்று சொல்லிவிட்டு வீட்டுக்குப் போய் விட்டாள். ஆகையால் மணி மட்டுந்தான் வந்தான். அவன் கழுதையைப் பார்த்து, "ஏ கழுதையே! நில்லு! நில்லு!" என்று சத்தம் போட்டான். கழுதை சட்டென்று நின்று விட்டது. எல்லாருக்கும் ஒரே ஆச்சரியம். "என்னடா மணி! நீ சொன்னதுமே கழுதை அப்படியே நின்னுடுத்தே!

உன்னிடம் அப்படி என்ன மந்திர சக்திடா இருக்கு?" என்றான் ராமு. "எனக்கு எல்லாம் தெரியும்டா. அவனிடம் மந்திரமும் இல்லை, மாயமும் இல்லை! அவன் சொன்னதற்கும் கழுதை கனைத்துப் போய் நின்றதற்கும் ஒத்துக் கொண்டது. அவ்வளவுதான்" என்றான் கிட்டு.

"இப்படி நேரம் போவதே தெரியாமல் வம்பு பேசிக் கொண்டேயிருந்தால் இன்றைக்கும் ஸர்க்கஸ் பார்க்க முடியாது. எல்லாரும் கிளம்புங்கள் உடனே" என்று உத்தரவு போட்டான் பாபு. எல்லாரும் உடனே புறப் பட்டார்கள்.

அன்று ஸர்க்கஸ் கொட்டகையில் ஒரே கூட்டம். எள் போட்டால் எள் விழவும் இடமில்லை. புதிதாக ஒரு வஸ்தாது வந்திருப்பதாகவும், அவர் சிங்கத்தை வைத்துக் கொண்டு பல வித்தைகள் காட்டுவதாகவும் கேள்விப் பட்டு அன்று ஸர்க்கஸுக்கு ஊரே திரண்டுவிட்டது. குரங்கு, கரடி, யானை, புலி எல்லாம் வந்து வித்தை செய்துவிட்டுப் போயின.

மற்ற எல்லா நிகழ்ச்சிகளும் முடிவடைந்தன. சிங்கந்தான் பாக்கி. வஸ்தாதும் கம்பீர மாகச் சிங்கக் கூண்டுடன் வந் தார். கூட்டத்தில் இருந்தவர்க ளெல்லாம் பலத்த கரகோஷம் செய்து அவரை வரவேற் ருர்கள். வஸ்தாது சபைக்கு ஒரு வணக்கம் செலுத்தி விட்டு, சிங்கத்தோடு வித்தை கள் செய்ய ஆரம்பித்தார். முதலிலிருந்தே சிங்கம் உற் சாகமாக இல்லை. அதனுல் அது ஒரு வித்தையும் நன் ருகச் செய்யவில்லை. கூட்டத் தில் ஒரு மூலையைப் பார்த்துக் கொண்டு நின்றது. கூட்டத் தில் இருந்தவர்கள் கசமுச என்று பேச ஆரம்பித்தார்கள். ஸாண்டோ கோபத்துடன் கையிலிருந்த சாட்டையைப் பளீர் என்று சொடுக்கினர். சிங்கம் கண்களில் தீப்பொறி பறக்க அவரைப் பார்த்தது. சொடுக்கிய சாட்டை சிங்கத் தின்மேல் விழுந்துவிட்டது. அவ்வளவுதான், மறுகணம் சிங்கம் பயங்கரமாகக் கர்ஜித் தது. ஒரே பாய்ச்சலாக ஸாண்டோவின்மேல் பாய்ந் தது. அதே சமயம் மணி துள்ளிக் குதித்துக் கூண்டின் அருகில் போய், "சிங்க ராஜா! அப்படியே நில்!" என்ருன். கூட்டத்தில் இருந்த வர்கள் என்ன நடக்குமோ என்று பயந்துகொண்டே யிருந்தார்கள். ஆனல் சிங்கம் அப்படியே அசையாமல் நின்று விட்டது. "இங்கே என் கிட்ட வா" என்ருன் மணி. சிங்கமும் ராஜ நடை நடந்து அவன் அருகில் வந்து கம்பீரமாக நின்றது. எல்லாரும் மூக்கின் மேல் விரலை வைத்தார்கள். அவன் சிநேகிதர்கள் எல் லாரும் பலத்த கரகோஷம் செய்தார்கள். கூட வந்திருந்த சுண்டுவும் சங்குவும் பிரமித் துப் போனுர்கள். மணி யின் கழுத்தில் மாலைக்குமேல் மாலையாக வந்து விழுந்தது. காமிராக்கள் 'கிளிக்' 'கிளிக்' என்று சத்தமிட்டன. "மணின்னு மணிப் பய தாண்டா நீ" என்று அவன் முதுகில் ஒரு ஷொட்டுக் கொடுத்தான் ராமு.

* * *

மணி திடுக்கிட்டுக் கண்ணை விழித்தான். அவ்வளவும் கனவா! அவனுல் நம்பவே முடியவில்லை. எதிரே சிரித்த முகத்துடன் அவன் அப்பா நின்றுகொண்டிருந்தார். "மணின்னு மணிப் பய தாண்டா நீ! பரீட்சையில் முதல்லே பாஸ் பண்ணி விட்டாயாமே! அடி சக்கை! அது சரி; இப்ப நீ என்கூடப் பீச்சுக்கு வருகிருயா? வர தானல் சீக்கிரம் 'டிரஸ்' பண் ணிக்கொண்டு வா. காற்ருடப் போய்விட்டு வரலாம்'' என்ருர் அப்பா. சந்தோஷத்துடன் குதித்துக்கொண்டே உள்ளே ஓடினுன் மணி.

அதிசய மோதிரம்

"அதிசய மோதிரம் ஒன்று கிடைத்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டதற்கு இதோ எட்டுக் குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியபடியே இங்கே பிரசுரித்திருக்கிறோம்.

ஜி. கமலா, வயது 11.

கே. சரஸ்வதி, வயது 12.

எனக்கு ஒரு அதிசய மோதிரம் கிடைத்தது. அதை நான் ஒரு நாள் எடுத்துக் கொண்டு ஒரு ஊருக்கு சென்றேன். அந்த மோதிரத்தை தொட்டு மோதிரமே மோதிரமே எனக்கு சாப்பாடு கொண்டுவா என்றேன் உடனே அந்த மோதிரம் எனக்கு ஒரு தட்டு நிறைய சாப்பாடு கொண்டு வந்து போட்டது. உடனே மோதிரத்தை எடுத்து மோதிரமே மோதிரமே என்னை நான் நினைக்கும் ஊருக்கு கொண்டு போய் விடு என்றேன். நான் நினைக்கும் ஊருக்கு கொண்டு போய்விட்டது. அங்கு ஒரு நாள் ஒருவருக்கு காய்ச்சல் வந்தது. அவர் சாகும் தருவாயில் இருந்தார். நான் உடனே மோதிரமே மோதிரமே அவரை பிடைக்கவை என்றேன். உடனே அவர் பிழைத்துவிட்டார்.

எனக்கு ஒரு அதிசிய மோதிரம் கிடைத்தால் நான் ஆகாய விமானத்தில் ஏறிச் செல்வேண். அழகிய பூங்காக்களை உண்டாக்கி அதில் விளையாடுவேண், அந்த மோதிரம் இருந்தால் நான் பாடம் படிக்காமலே பரிக்ஷை எழுதுவேண். எனக்கு பச்சை வர்ண கிளியைப்போல் பறக்க அதிக ஆசை அப்படிப் பறப்பேன். இருந்தாற்போல் இருந்து பட்சியாகவும் மிருகமாகவும் என் இஷ்டம் உருவம் மாற்றி பறப்பேன். என் அண்ணன், அக்கா எல்லோரையும் ஏமாற்றுவேண். மீனாக மாறி கடலிலும், நதிகளிலும் நீந்துவேண். அந்த அதிசய மோதிரம் இப்போது என் கையில் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

ஆர். எம். சோலச்சி, வயது 10.

ஏ. சாந்தாபாய், வயது 12.

நான் அந்த அதிசிய மோதிரம் எனக்கு கிடைத்த பிறகு நான் வேண்டிய பஜ்சணம் ஆடைகள் முதலியவைகளை வாங்குவேன். எங்கேயாவது போகும் போது அந்த அதிசிய மோதிரத்தை எடுத்துக் கொண்டு போவேன். அந்த அதிசிய மோதரத்தை எடுத்துக் கொண்டு போக மறந்தேனல் அதை நிளைப்பேன். எனக்கு பஜ்சணம் ஆடைகள் முதலியவற்றை எனக்கு கிடைக்கின்றன. எனக்கு நகை இவைகள் வேண்டும் போது கூட அந்த அதிசிய மோதிரத்தை நினைப்பேன். எனக்கு வந்து விடும். அந்த மோதிரத்தை நினைப்பேன். எனக்கு தங்கம் முதலியவை வந்துவிடும். உடனே தட்டானிடம் கொடுத்து ஒரு மாலையோ செய்யச் சொல்வேன். இந்த அதிய மோதிரத்தை நினைத்தால் கூட நான் ஒட்டியானத்தை தங்க கற்களால்கூட பண்ணிக் கொள்ளலாம் ஜிமிக்கி இவைகளை வாங்கிக் கொள்ளலாம் இவ்விதமாக ஆனந்தமாக இருக்கலாம்.

நான் நீடம் ஒரு மோதிரம் கிடைத்தால் அதைக் கொண்டு போய் விற்போன் அந்த கசைக் கொண்டு எனக்கு வேண்டிய உடைகளை வாங்குவேன் வளையில் வாங்குவேன் மணிகள் வாங்குவேன் சான்து பூட்டி கண்ணுக்கு வைக்கிற மைய் ரிப்பான் தலைக்குச்சு பேனுசல் புத்தகம் விளையாடு சமான்கள் லொச் ஊசி எம்பராஞ் ஓர் வாங்கி சாப்பிடுவோன் சாங்களை அதில் மிதி இருந்தால் அதைக் கொண்டுபோய் கொடுப்போன்.



கே. டி. மரகதம், வயது 11.

பி. காந்திமதி, வயது 12.

ஒரு அதிசய மோதிரம். அது எனக்குக் கிடைத்தால் நான் அதை வைத்துக் கொண்டு எனக்கு நன்ருக படிப்பு வர வேண்டும். கடவுளிடத்தில் பக்தி வரவேண்டும். பலவித தித்திப்புப் பண்டங்கள் வேண்டும். நகையால் செய்யப்பட்ட ஆபரணங்கள் வேண்டும். பட்டுப் பாவாடையும் விளையாட சில சிநேகிதர்களும், ஒரு கிளியும், பொய் சொல்லாமல் இருக்கவும், ஒருவருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமும், ஒருவரிடத்தில் அன்பும் இருக்க வேண்டும் என்று நான் மோதிரத்தை வைத்துக் கொண்டு எண்ணுவேன். எந்த வகுப்பிலும் பரீச்சையில் பாஸாக வேண்டும் என்று எண்ணுவேன். என்னுடைய தாயாருக்கு நன்ருக கண் தெரிய வேண்டுமென்று நினைப்பேன். எனக்கு ஒரு தங்கையும் தம்பியும் இருக்கவேண்டும் என்று நினைப்பேன். என் வீட்டில் ஒரு கார் இருக்க வேண்டும் என்று நினைப்பேன். பூந்தோட்டம் இருக்க வேண்டும் என்று நினைப்பேன். என் அப்பா என்னை அடிக்கக் கூடாது என்று மோதிரம் ஆப்டால் இவைகளை எல்லாம் நான் நினைப்பேன்.

அதிசிய மோதிரம் கிடைத்தால் அதை நான் எனக்கு வேண்டி பொன் தங்க சங்கலி அதை எடுத்து கழுத்தில் போட்டுக் கொள்வேன். அதை தினமும் போட்டுக்க மாட்டேன் அதை விஷே தினங்களில் போட்டுப்பேன் அதில் மெருகு போய்விட்டாமல் பத்திரமாக எடுத்து வைப்பேன். மோதிரம் கிடைத்தால் மோதிரத்தை கையில் போட்டுக்கொள்வேன். மோதிரத்தை என் தகப்பன் இடத்தில் கொடுத்து பத்திரமாக வைத்துக் கொள்வேண். விஷே தினந்தனில் அதை போட் கொள்ள வேண்டும். அதை தினமும் பொட்டுக் கொள்ள மாட்டேன்.

எஸ். பத்மா, வயது 13.

என். ரங்கராஜும், வயது 11.

எனக்கு ஒரு அதிசய மோதிரம் கிடைத்தால் எனக்குப் புஸ்தகம் வேண்டும் அதை நான் படிப்பேன் அதில் இருப்பதை எழுதுவேன். அதில் உள்ள விஷயங்களை புரிந்து கொள்வேன் அதை பிறருக்குக் கூறுவேன். எனக்கு அதே வைர மோதிரம் கிடைத்தால் அதைக் கையில் போட்டுக் கொள்ளுவேன். அதை அழித்து சங்கிலி செய்து கொள்வேன் அதை கழுத்தில் போட்டுக்கொள்வேன். அதை அழித்து வளையல் செய்துகொள்வேன். வளையலை கையில் போட்டுக் கொள்வேன். எனக்கு அதில் பக்ஷணங்கள் வந்தால் நான் அதை தின்பேன். என் நண்பர்களுக்குக் கொடுப்பேன். மறு நாளுக்கு வைப்பேன் எனக்கு துணிகள் கிடைத்தால் நான் அதை உடுப்பேன்.

எனக்கு அந்த மோதிரம் கிடைத்தால் அந்த மோதிரத்தை அதிக பணம் வேண்டும் என்று கேட்பேன். பணம் வந்தவுடன் பள்ளிக்கூடங்கள் கட்டவும், பெரிய கட்டிடங்களும் கட்டி சத்திரமும் கட்டி கிணறுகள் வெட்டி ஏழைகளுக்கு உதவுவேன். பல வைத்திய சாலைகளை அமைத்து ஏழைகளுக்கு வைத்தியம் செய்யும்படி சொல்வேன். குளம், குட்டை முதலியவை வெட்டி தண்ணீர் வசதி செய்வேன். ரேஷன் எல்லாவற்றையும் எடுத்து விடு என்று மோதிரத்தினிடம் சொல்வேன். நான் இருக்கும் ஊரில் பிச்சைக்காரர்கள் இல்லாமல் செய்துவிடுவேன். எனக்கு கோவில் முதலியவை கட்டி கடவுளைக் கொண்டாடச் செய்வேன். என் நாட்டில் பஞ்சத்தை ஒழித்துவிடுவேன். நம் நாட்டில் ஒழுக்கமும் அன்பும் உண்டாகும்படி செய்வேன். பெரியோரிடத்தில் மரியாதையாக நட-

கண்டெடுத்த முத்து

'சோமசன்மா'

ஒரே ஒரு குப்பை மேட்டில் ஒரே ஒருகோழி கிளறிக் கிளறி ஆகாரம் தேடிக்கொண் டிருந்தது. அந்தக் கோழி ஒரு சேவல் கோழி. சேவல் கோழி என்றால்தான் உங்களுக்குத் தெரியுமே; ஆண் கோழி. அதற்குப் பெண்டாட்டிதான் பெட்டைக்கோழி.

ரொம்ப நேரம் இப்படியே அது தேடிக்கொண் டிருந்த பொழுது அந்தக் கோழிக்கு ஒரு சின்னப் புழுக்குஞ்சுகூட அகப்படவில்லை. கால் எல் லாம் வலித்தது; குனிந்து குனிந்து கழுத்து வீங்கிக் கொண்டது. அது என்ன செய்யும், பாவம்! வீட்டுக்கு வெறுங்கையோடு திரும்பிப் போனால் பெண்டாட்டிக் கோழி திட்டும். "நாள் முழுவதும் வெளி யிலே போய் அலைந்து விட்டு வெறுங் கையோடு வீட்டுக்கு வந்தால் எப்படிச் சாப்பிடுகிறது?" என்று வாயில் வந்த படி பேசும். அதனால் அதற்கு என்ன செய் வது என்று தெரிய வில்லை. வருத்தத் துடன் ஓர் ஆமணக் குச் செடியின்மேல் சாய்ந்து கொண்டு கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு நின்றது.

அப்போது தூரத்தில் ஏதோ ஒரு வஸ்து பளபள வென்று மின்னிக்கொண்டு கிடந்தது. அதைப் பார்த் ததும், "ஆஹா! இன்னிக்குச் சாப்பாடு கிடைத்தது!" என்று சந்தோஷத்துடன் குதித்துக்கொண்டு ஓடிப் போய் அந்த வஸ்துவைப் பொறுக்கிற்று.

அதைக் கையில் எடுத்துப் பார்த்ததும் அது என்ன வஸ்து என்று அதற்குத் தெரியவில்லை. சுண்டைக்கா யைப் போல் அது உருண்டை

யாக இருந்தது. ஆனால் வெள்ளை நிறம். கண்ணுக்குப் பளபளவென்று மின்னிற்று.

புழுவாயிருந்தால் அதற்கு உயிர் இருக்க வேண்டும். இல்லை, ஏதாவது புது தினுசான தானியமோ என்றால் அதற்கு வாசனை இருக்கவேண்டும். அதுவும் இல்லை. பின் என்ன அது?

உண்மையில் அது ஒரு நல்முத்து. பெண்கள் மாலையாகக் கோத்துக் கழுத்தில் போட்டுக் கொள்வார்களே, அந்த முத்துத்தான். ஆனால் அது கோழிக்கு எப்படித் தெரியும்? அதை எடுத்துக் கொண்டு அது வீட்டுக்கு ஓடிற்று.

தன் பெண்டாட்டியிடம் கொண்டுபோய் அதைக் கொடுத்தது. "இதைப் பார்த்தாயாடி, ஓர் அபூர்வ வஸ்து!" என்றது.

பெண்டாட்டி அதைப் பார்த்ததும், "இது ஏதோ கூழாங்கல் மாதிரி இருக்கிறது. இதைக் கொண்டுபோய்க் குப்பைக் குழியில் போட்டுவிட்டு ஏதாவது ஆகாரம் கொண்டு வாருங்கள். குழந்தைகள் பசியால் துடிக்கின்றன" என்றது.

சேவல்: இதுவும் ஆகாரம் தான். இதை மாவாக அரைத்தால் பூரியாய்ப் பண்ணிச் சாப்பிடலாம்.

பெட்டை: உங்கள் மூளையே மூளை! கூழாங்கல்லை யாராவது மாவு அரைப்பார்களா? பேசாமல் போய் ஏதாவது புழு பூச்சியைப் பிடித்துக் கொண்டு வாருங்கள்.

அதைக் கேட்ட சேவலுக்குச் சந்தேகம் வந்து விட்டது. "இதோ, நான் போய் யாரையாவது கேட்டுக் கொண்டு வருகிறேன் பார்! இது நிச்சயமாக ஏதோ ஒரு பயறு என்றுதான் நினைக்கிறேன்" என்று அந்த முத்தை எடுத்துக்கொண்டு ஓடிற்று.

குளத்தங்கரையில் ஒரு வாத்து நின்றுகொண்டிருந்தது. சேவல் அதனிடம் போய், "ஏய், ஏய்! இதோ பாரடா! அபூர்வ வஸ்து ஒன்று அகப்பட்டிருக்கிறது. இது என்ன என்று சொல்லிவிடு, பார்க்கலாம்" என்றது.

வாத்து அதை வாங்கிப் பார்த்தது. "இது என்ன என்று தெரியுமா உனக்கு?" என்று கேட்டது.

"என்ன, நீதான் சொல்லேன்" என்றது சேவல்.

"இது ஒரு கோலிக்குண்டு. சின்னப் பசங்கள் தெருவில் விளையாடுகிறார்களே, அது. காலணாவுக்குக்கூடப் பிரயோஜனப்படாது" என்றது வாத்து.

"இதன் அருமை உனக்கு என்ன தெரியும்? எப்போதும் சேற்றுக்குள் காலை விட்டுக் கொண்டு 'க்வா' 'க்வா' என்று கத்துகிற பயல்தானே நீ?" என்று வெடுக்கென்று அதைப்

பிடுங்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தது சேவல்.

போகிற வழியில் தெருக் கோடியில் ஒரு கிழட்டு நாய் உட்கார்ந்துகொண்டு ராம ஜபம் பண்ணிக்கொண்டிருந் தது. அதைப் பார்த்த சேவல் அதன் அருகில் போய், "மாமா, மாமா" என்று கூவிற்று.

நாய் மெதுவாகத் திரும்பிப் பார்த்து, "யாரடா அவன்?" என்றது.

சேவல், "நான்தான், மாமா, சேவல் கோழி. உங்களிடம் ஒரு காரியமாய் வந்தேன்" என்றது.

நாய்: என்னடா அது?

சேவல்: எனக்கு அபூர்வ வஸ்து ஒன்று அகப்பட்டது. அது என்ன என்று தெரிய வில்லை.

நாய்: ஓஹோ! எங்கே கொண்டு வா, பார்க்கலாம்.

சேவல் கோழி முத்தை எடுத்து நாயின் கையில் வைத் தது. நாய் அதைப் பிடித்துக் கொள்வதற்குள் அந்த முத்து கீழே உருண்டு ஓடிவிட்டது.

"எங்கேடா அது? எங்கே?" என்று நாய் தடவிற்று.

"இதோ இருக்கிறது, மாமா" என்று சேவல் பொறுக்கி மறுபடியும் கையில் எடுத்துக் கொடுத்தது. அப் போதும் அதற்குத் தெரிய வில்லை. ஏனென்றால் அதற்கு வயதாகிவிட்டது அல்லவா? அதனால் அதற்குக்கண் தெரிய வில்லை. பிறகு மடியிலிருந்து கண்ணாடியை எடுத்துப் போட்டுக்கொண்டு, "எங்கே!" என்று அந்த முத்தை வெளிச்

சத்தில் போய்த் திருப்பித் திருப்பிப் பார்த்தது.

சேவல் ஆவலுடன், "அது என்ன, மாமா, தானியந் தானே?" என்று கேட்டது.

"அவசரப்படாதே, அப்பா!" என்று அதைப் புரட்டிப் புரட்டிப்பார்த்துவிட்டுப்பிறகு சொல்லும்: "இதைப் பார்த்தால் ஓர் அபூர்வமான தானியம் போலவும் இருக்கிறது; பிறகு இல்லை போலவும் இருக்கிறது. இது தானியமாயிருந்தால் ஆகாரத்துக்குப் பிரயோஜனப்படாது. தானியமில்லாவிட்டால் வேறு ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது."

இவ்விதம் நாய் சொல்லக் கேட்ட சேவலுக்கு ஒன்றுமே புரியவில்லை. "அது எப்படியிருந்தாலும் என்னிடம் கொடுங்கள். உங்களுக்கு ஒரு சலாம்" என்று சொல்லிவிட்டு முத்தை வாங்கிக்கொண்டு பறந்தது சேவல்.

"இந்தக் காலத்துப் பசங்களுக்கே மரியாதை தெரிவதில்லை" என்று முணுமுணுத்துக்கொண்டே நாய் மூக்குக் கண்ணாடியை மடக்கி மடியில் வைத்துக்கொண்டது.

வீட்டுக்குப் போய் அந்த முத்தை மாவாக அரைத்துப் பார்த்து விடுவது என்ற தீர்மானத்துடன் போன சேவல் கோழி வழியில் ஓர் ஆட்டுக் குட்டியைக் கண்டது. ஆனால் வீட்டுக்குப் போக வேண்டும் என்ற அவசரத்தில் அதனிடம் ஒன்றுமே பேசாமல் போயிற்று.

அதைக் கண்ட ஆடு, "டேய் கோழி, என்னடா அவ்வளவு அவசரம்? எந்த ராஜ்யத்தைப் பிடிக்கப் போகிருய்?" என்றது.

"ஒன்றுமில்லையடா! கொஞ்சம் அவசரமாய்ப் போக வேண்டும்" என்று சேவல் ஓடிற்று.

ஆடு விடவில்லை. "அதென்னடா, கையில்?" என்று மறித்தது. "இது ஒண்ணுமில்லை; சின்னக் கோலி" என்று கோழி அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு அதை நீட்டிற்று.

அந்த ஆட்டுக்குக் கொஞ்சம் குறும்புத்தனம் ஜாஸ்தி. அது அந்த முத்தைப் பார்த்ததும், "ஐயையோ! இதை எங்கே கண்டெடுத்தாய்?" என்றது.

"ஏன்?"

"இது ஒரு கெட்ட கல். இதை யாரோ மந்திரித்து உன் வழியில் போட்டிருக்கிறார்கள். இதை வீட்டில் வைத்துக்கொண்டிருந்தால் எல்லாருக்கும் ஜுரம் வந்துவிடும். அதுவும் சின்னக் குழந்தைகள் இருக்கும் வீட்டில் இதை வைத்திருக்கவே கூடாது. இப்படித்தான் எங்க தாத்தா இந்த மாதிரி ஒரு கல்லைப் பொறுக்கிக்கொண்டு வந்தாராம்......"

இவ்விதம் ஆடு பேசிக்கொண்டேயிருந்தது. ஆனால்

சேவல் அதைக் காதில் வாங்கிக்கொள்ளவேயில்லை. கையில் முத்துடன் அங்கிருந்து கிளம்பி வீட்டுக்கு வந்தது.

நேராகக் குப்பைக் குழியண்டை போயிற்று. அங்கே ஒரு கருங்கல் கிடந்தது. அதன் மேல் அந்த முத்தை வைத்தது. இன்னொரு கல்லை எடுத்து, "ஏ, கூழாங்கல்லே! உன்னை இதோ நசுக்கப் போகிறேன். நீ எதுவாயிருந்தாலும் சரி, உன்னைக் கொன்றுவிட்டுத்தான் மறு காரியம்" என்று ஓங்கிப் போடப் போயிற்று.

அப்போது அந்த முத்து கட கட வென்று சிரித்துவிட்டுச் சொல்லும்: "ஏ கோழியே! உன் தலையில் அலங்காரமாகக் கொண்டை இருக்கிறதே யொழிய அதற்குள் ஒரு துளி மூளைகூடக் கிடையாது. என்னைச் சாமானியமாக நினைத்துவிட்டாய். என்னைக் கண்டால் மகாராஜாக்கள் தங்களுடைய தலையில் வைத்துக் கொண்டாடுவார்கள். மகாராணிகள் கழுத்தில் மாலையாகப் போட்டு அழகு பார்ப்பார்கள். என்னுடைய அருமை உனக்கு எப்படித் தெரியும்? நீ வெறும் குப்பையைக் கிளறுகிற பயல்தானே? என்னுடைய துரதிருஷ்டம் உன்னுடைய கையில் வந்து அகப்பட்டேன்!"

அதைக் கேட்ட கோழி, "நீ பெரிய அருமையான வஸ்துவாக இருக்கலாம். ஆனால் எவ்வளவு பெரிய மகாராஜாவாயிருந்தாலும் அவன் உன்னைத் தின்று பசியாற முடியாது. எனக்கு நீ வெறும் கூழாங்கல்தான்" என்று சொல்லிற்று.



இப்படிச் சொல்லி விட்டுச் சேவல் மறுபடியும் அதை நசுக்கப் போயிற்று. அந்தச் சமயத்தில் இவ்வளவு நேரம்பின்னால் நின்றுகொண்டு இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த பெட்டைக் கோழி ஓடி வந்தது.

“இதோ பாருங்கள்! அதை நசுக்காதீர்கள்! நான் கழுத்தில் கோத்து மாலையாகப் போட்டுக் கொள்ளுகிறேன்” என்று தன் புருஷனைப் போய் மறித்தது.

அதைக் கேட்ட சேவல், “அடி அசடே! இதைக் கோத்துக் கழுத்தில் யாராவது போட்டுக்கொள்ளுவார்களோ? நம்ம ஜாதியிலேயே இதுவரையில் இல்லாத வழக்கமல்லவா அது?” என்றது.

“ஆமாம்! நானும் உங்களுக்கு வாழ்க்கைப் பட்டு இரண்டு வருஷமாகிறது. இதுவரையில் ஒரு வெள்ளிக் காப்புக்கூட நீங்கள் பண்ணிப் போட்டதில்லை. தெய்வச் செயலாய் அகப்பட்ட இந்தப் பளபளப்பான நகையை நசுக்கப் பார்க்கிறீர்கள்!” என்று அது கண்ணைக் கசக்கிக் கொண்டது.

அதைப் பார்த்த சேவல், “இந்தா! நீ அழ உட்கார்ந்து விடாதே! இதைக் கழுத்தில் வேண்டுமானாலும் மாட்டிக் கொள். அல்லது காலில் வேண்டுமானாலும் மாட்டிக் கொள்!” என்று முத்தைப் பெண்டாட்டியிடம் வீசி எறிந்தது. அதைப் பொறுக்கிக் கொண்ட பெட்டைக் கோழி சந்தோஷத்துடன் உள்ளே ஓடிற்று.

ஆகையினால், பிள்ளைகளே! இதனால், முத்து என்னதான் உயர்ந்த வஸ்துவாயிருந்தாலும் பசிக்கு உதவாது என்பதும், கோழியாயிருந்தாலும் பெண்களுக்கு நகையென்றால் பைத்தியம் என்பதும் தெரிகிறது அல்லவா?

பவழவல்லி

கி. ரா.

சுந்தரத்தை அழைத்துப் போன மச்சப்பெண்கள் அரண்மனைக்குள் சென்றதும் அவனுக்குப் பலவிதமான உபசாரங்கள் செய்தார்கள். ஒருத்தி பன்னீரைத் தெளித்தாள். புஷ்பங்களை ஒருத்தி அவன் மேல் தூவினாள். இன்னொருத்தி பல வர்ண ஆடைகளைக் கொண்டு வந்து வைத்தாள். வேறொருத்தி நவரத்தினங்கள் இழைத்த ஒரு கிரீடத்தை அவன் தலையில் வைக்கப்போனாள்.

சுந்தரம் பிரமித்தான். அவர்களை நோக்கி, "இதெல்லாம் எனக்கு வேண்டாம்! நிறுத்துங்கள்" என்றான். ஆனால் அவர்கள் சிரித்துக்கொண்டே மேலும் மேலும் உபசாரம் செய்வதில் ஈடுபட்டார்கள்.

அந்த நவரத்தினக் கிரீடத்தை வெடுக்கென்று கையில் வாங்கிக்கொண்ட சுந்தரம், "இது என்ன விலை தெரியுமா உங்களுக்கு! இதைத் தலையில் வைத்துக்கொண்டு எங்கள் ஊரில் போனால் பட்டப்பகலிலேயே என் தலையைத் திருடர்கள் கொண்டுபோய் விடுவார்கள்!" என்றான். அதன்பிறகு பல பெண்கள் தட்டுகளில் வரிசையாகப் பழவகைகளைக் கொண்டு வந்து வைத்தார்கள். கிண்ணங்களில் பாலைக் கொண்டுவந்து வைத்தார்கள்.

சுந்தரத்துக்கும் நல்ல பசிதான். ஆனால் குளித்து மூன்று நாளாகிறதே என்று நினைத்தான். அவர்களைப் பார்த்து, "இங்கே எங்காவது குழாய் இருக்கிறதா?" என்றான்.

அதைக் கேட்டதும் அந்தப் பெண்கள், 'கொல்' என்று சிரித்தார்கள். "கூழாய்! கூழாய்!" என்று அந்த வார்த்தையைத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். அவர்களுக்குக் குழாய் என்றால் என்னவென்று தெரியவில்லை.

"குழாய் என்றால், அதில் தண்ணீர் வரும். அதற்கடியில் உட்கார்ந்துகொண்டு குளிப்பது. தெரிந்ததா? நான் குளிக்க வேண்டும்; அதற்காகத்தான் கேட்டேன்" என்றான்.

அப்போது ஒரு பெண் அவனிடம் சொன்னாள்: "இந்த நாட்டில் குளிக்கவேண்டியதில்லை. உடம்பில் அழுக்குப் படிவதே கிடையாது."

சுந்தரத்துக்கு அது ஆச்சரியமாய் இருந்தது. அந்த ஆடையாபரணங்களை அணிந்துகொண்டான். பழங்களில் வேண்டிய மட்டும் உண்டான். அப்போது ஒரு பெண் ஓடிவந்து, "தேர் தயார்!" என்றாள்.

அரண்மனைக்கு வெளியில் ஓர் அலங்காரமான சின்ன ரதம் நின்றது. அதை இரண்டு பிரம்மாண்டமான முதலைகள் இழுத்தன. அவைகளைப் பார்த்ததும்

சுந்தரத்துக்குப் பயமாய் இருந்தது. அந்த முதலைகளை நம்பி எப்படி வண்டியில் ஏறுவது?

அவனுடைய பயத்தை அறிந்துகொண்ட ஒரு பெண், "இந்த முதலைகள் ஒன்றும் செய்யா. இவைகளுக்குப் ஆமை எங்கே? அதை நம்பித் தானே அவன் அந்த வேலையை ஒப்புக்கொண்டான். அதைக் காணோமே?

சாரதியோ, "நேரமாச்சு, சீக்கிரம் ஏறுங்கள்" என்றான்.

வேறு வழியில்லாமல் சுந்தரம்

பல்லையெல்லாம் பிடுங்கியாகி விட்டது. அதனால் தைரியமாகப் போங்கள்" என்றாள்.

வண்டியில் ஏறப்போன சுந்தரம் தயங்கி நின்றான். தேரில் ஏறி உட்கார்ந்துகொண்டான். முதலைகள் வேகமாகக் கிளம்பின.

கொஞ்சதூரம் போனதும், "பையா" என்ற குரல் கேட்டுச்

சுந்தரம் திடுக்கிட்டான். ஆனால் யாரையும் காணவில்லை. மறுபடியும், "இதோ இருக்கிறேன்" என்று குரல் வந்தது. அப்போதுதான் குனிந்து பார்த்தான். அவன் காலடியில் ஆமை உட்கார்ந்திருந்தது! அதே தங்க ஆமை!

அதைப் பார்த்ததும் சுந்தரம் சந்தோஷமடைந்து, "உன்னைத்தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

"நான் உன்னை ஏமாற்றி விட்டதாகத்தானே நினைக்கிறாய்!" என்று அது சிரித்தது.

"ஏமாற்றுவது இருக்கட்டும். இந்த ராஜா எதற்காக என்னை இப்படி அனுப்பியிருக்கிறான்? அந்தப் பவழவல்லி யார்? சிலையிடம் போய் ராஜா எதற்காக அழுதான்?" என்று அவன் மூச்சுவிடாமல் கேட்டான்.

"சொல்கிறேன் கேள்: இந்த ராஜாவுக்குச் செல்வமாக ஒரே பெண்தான் உண்டு. அவள்தான் பவழவல்லி. உன்னைக் கண்டு பேசிக்கொண்டிருந்தாளே அவள்தான்" என்று ஆரம்பித்தது ஆமை.

"அப்படியானால் அந்தச் சிலை யாருடையது? அதைப் பார்த்து அரசன் ஏன் அழுதான்?"

"அவசரப்படுகிறாயே! அந்தச் சிலையும் பவழவல்லிதான்.

அந்தப் பெண் பிறந்தவுடன் மிகவும் உயரமாயிருந்தாள். அதைக் கண்டு கவலைப்பட்ட அரசனுக்கு ஒரு பெரியவர் வந்து, 'இந்தப் பெண் மிகவும் அதிருஷ்டசாலி. இவளை மிகவும் உயரமான ஒரு மனிதன் வந்து கல்யாணம் செய்து கொள்வான்' என்று சொன்னார்.

"இப்படி இருக்கையில் அவளுடைய மாமன் மகன் ஒருவன் இருக்கிறான். அவன் பெயர் கருநாகன். அவன் இவளையே தான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னான். ஆனால் பவழவல்லிக்கு அவனைக் கண்டாலே பிடிக்காது. ஏனென்றால் அவன் பொல்லாதவன். அவனுக்குப் பல மந்திரவாதிகள் சிநேகம். அவர்களுடைய உதவியால் எந்தப் பெண்ணைக் கண்டாலும் தூக்கிக்கொண்டு போய்விடுவான்.

"அவன் வந்து பவழவல்லியைக் கல்யாணத்துக்குக் கேட்டான். பவழராஜா தன் மகளைக் கேட்டுக்கொள்ளும்படி சொன்னார். ஒரு நாள் அவள் தனியாக உத்தியானவனத்தில் இருக்கும்போது அவளைப் போய்க் கேட்டான். அவள் கண்டிப்பாய் மணந்துகொள்ள முடியாது என்று சொல்லிவிட்டாள். உடனே கோபம் கொண்ட கருநாகன் அவளுடைய கழுத்தில் இருந்த தங்கப் பதக்கத்தைப் பிடுங்கிக்கொண்டு போய் விட்டான்.

"அதைக் கொண்டுபோய்த் தன்னுடைய சிநேகிதன் மந்திரவாதியிடம் கொடுத்துவிட்டான். அவன் அதை மந்திரித்து அல்லிக்குளத்துக்கு அடியில் தந்தப் பெட்டிக்குள் வைத்து விட்டான். அதனால் என்ன ஆயிற்று? பவழவல்லி கற்சிலையாய் மாறிவிட்டாள். ஆனால் பௌர்ணமியன்று மாத்திரம் அவள் சுய உருவடைவாள். ஏனென்றால் அன்று எந்த மந்திரமும் பலிக்காது. பூர்ண சந்திரன் எங்களுடைய குல தெய்வம் அல்லவா?

"முன்பு உன்னைக் கண்டாளே, அன்று பௌர்ணமி. அதனால்தான் அவளை நீ பார்க்க முடிந்தது. அன்று இரவே அவள் மறுபடியும் சிலையாய் விட்டாள். பாவம்!" என்று ஆமை சற்று மூச்சு வாங்கியது.

அந்தக் கதையைக் கேட்ட சுந்தரத்துக்கு அந்தப் பவழவல்லியின்மேல் அநுதாபம் உண்டாயிற்று. அவள் எவ்வளவு அழகாய் இருந்தாள்! எவ்வளவு அன்பாகப் பேசினாள்!

ஆமையைப் பார்த்து, "அதற்காக என்னை ஏன் இந்த அரசன் ஏவினான்?" என்றான்.

"ஏனென்றால், பவழவல்லி சிலையாகப் போனதும் அரசன் பல மந்திரவாதிகளைக் கூப்பிட்டு என்ன செய்வதென்று கேட்டான். ஒரு மந்திரவாதி, 'அரசகுமாரியின் தங்கப் பதக்கத்தை உயரமான ஒரு மனித வாலிபன் போய் என்றைக்கு எடுத்து வருகிறானோ அன்று அவள் பழைய உருவமடைந்து விடுவாள்' என்று சொன்னான். அதனால் எங்கள் நாட்டுக்குப் புதிதாக வரும் பையன்களையெல்லாம் அரசன் சிறையில் வைத்து, அவர்களுடைய உய

ரத்தை அளந்து பார்ப்பான். அவர்களில் உயரமானவர்களைப் பார்த்து இந்த வேலையைச் செய்யும்படி கட்டாயப் படுத்துவான். இப்படியே ரொம்ப நாளாகச் செய்துவருகிறான். இன்னும் யாராலும் அதை எடுத்து வர முடியவில்லை."

"ஏன்?"

"ஏனென்றால், அந்தக் குளத்தில் ஏராளமான மந்திர சக்தியுள்ள முதலைகள் வசிக்கின்றன. எவ்வளவு பேர் போனாலும் அவைகள் விழுங்கிவிடும். எவராலும் அந்தத் தண்ணீருக்குள் இறங்கவே முடியாது!"

அதைக் கேட்டதும் சுந்தரத்துக்குத் திகிலாய் இருந்தது. "நான்மட்டும் எப்படிப் போய்ப் பதக்கத்தை எடுக்க முடியும்?" என்று கேட்டான்.

"நான் சொல்லுகிறபடி செய்தால் நீ அந்தப் பதக்கத்தை எடுத்து வரலாம். அந்தக் குளத்தின் மத்தியில் ஒரு மைய மண்டபம் இருக்கிறது. அதில் தங்க அன்னம் ஒன்று இருக்கிறது. அந்தக் குளத்தங்கரையில் ஓர் அரசமரம் இருக்கிறது. நீ அதன் அடியில் நின்றுகொண்டு உன் ஆயுளில் சொல்லிய மூன்று உண்மைகளை நினைத்துக் கொள்ளவேண்டும். உடனே அந்தப் பெண்பறவை உன் தோளில் வந்து உட்கார்ந்து கொள்ளும். அந்த மரத்தில் இரண்டு கூண்டுகள் தொங்குகின்றன. ஒன்று தங்கக் கூண்டு. இன்னொன்று பிரம்பினால் ஆனது. அந்தப் பட்சியை நீ பிடித்துப் பிரம்புக் கூண்டுக்குள் அடைத்துவிட்டால் அது நீ சொன்னபடியெல்லாம் கேட்கும். 'தந்தப் பெட்டியை எடுத்து வா' என்று சொன்னாயானால் உடனே நீரில் முழுகிப்போய்க் கொண்டுவந்து சேர்த்துவிடும். அப்படியின்றி நீ அதைப் பொன் கூண்டுக்குள் அடைத்தாயோ, உனக்கு ஆபத்து ஏற்படுவது நிச்சயம். ஆகையினால் என்ன ஆனாலும் தங்கக் கூண்டின் பக்கம் போய்விடாதே. இதைச் செய்துவிட்டால் பவழவல்லி பிழைத்துவிடுவாள். பவழராஜா உனக்குத் தகுந்தபடி சம்மானம் கொடுப்பார்."

சுந்தரத்துக்குப் பவழவல்லியின் கதை அதிசயமாய் இருந்தது. இவ்வளவு தூரம் தனக்கு யோசனையெல்லாம் சொல்லி உதவிசெய்யும் இந்த ஆமை யார்? யாராவது ரிஷியாக இருக்குமோ?

அதைக் கேட்கவேண்டும் என்று ஆவலுடன் குனிந்து பார்த்தான். என்ன ஆச்சரியம்! அந்த ஆமையைக் காணவில்லை. திரும்பிப் பார்த்தான். அந்த ஆமை சாலையில் ஊர்ந்து கொண்டு போவது தெரிந்தது.

இரு முதலைகளும் நாலுகால் பாய்ச்சலில் போய்க்கொண்டிருந்தன. வழி நெடுகிலும் தாழையைப்போன்ற விசித்திரமான செடிகளும், நாய்க்குடையைப்போன்ற ஏராளமான மரங்களும் காணப்பட்டன.

சுந்தரம் ஆமையின் நல்ல குணத்தைப்பற்றியும், அல்லிக் குளத்தங்கரையில் தொங்கும் கூண்டுகளைப்பற்றியும் யோசித்துக்கொண்டே போனான்.

(தொடரும்.)

காணாமல் போன பொம்மை

"சூடாமணி"

பொம்மைக்குக் கம்மலிட்டுப் பொன்நகைகள் பூட்டிவிட்டு
ஜிம்ஜிமிக்கி மூக்குத்தி ஜவ்வாதுப் பொட்டுமிட்டேன்.
பட்டினால் சேலைகட்டிப் பட்டுச்சட் டையும்போட்டுக்
கட் டிவிட்ட கூந்தலுக்குக் கதம்பமல்லி சூட்டிவிட்டேன்.
பொன்சதங்கை கிணுகிணுக்கப் பொன்பட்டுச் சலசலக்கப்
பொன்வண்டி மேலேறிப் பொம்மையோடு புறப்பட்டேன்.
திருநாளில் தெய்வத்தைத் தெரிசனமும் பண்ணிவிட்டுத்
தெருவெங்கும் திரிந்துவந்தோம் தெருக்கூத்துப் பார்த்து
வந்தோம்.

வேடிக்கை பார்த்திருந்தேன்; விளையாடி மகிழ்ந்திருந்தேன்.
ஓடிப்பொம் மைஎங்கோ ஒளிந்துகொண்ட தம்மம்மா!
திருநாளில் பெருங்கும்பல்! தெருஎங்கும் திரிந்தேனே!
திரிந்தெங்கும் அலைந்தேனே! தேடிநான் சோர்ந்தேனே!

கால்கைகள் தள்ளாடக் கண்ணிரண்டும் நீர்பாய
நாலுதிக்கும் சுற்றிவந்து நடுத்தெருவில் அழுதுவிட்டேன்.
பொம்மையைத் தேடிவரப் போலிசுக்குத் தெரிவித்தேன்.
பொம்மையைநான் பார்ப்பேனோ? பொன்அழகைக்
காண்பேனோ?
பொம்மையைநான் எண்ணிஎண்ணிப் பொழுதெல்லாம்
அழுதிருந்தேன்.
பொம்மையில்லை! நாளெல்லாம் பொழுதுபோம் வழியில்லை!
பொழுதுபோய் விடவேநான் பொம்மைக் கடை அடைந்தேன்.
அழுதுகொண்டு பார்த்தேனே; அழகுடைய பொம்மைகண்டேன்.
அதுதான்என் பொம்மையென்றேன்; அதைவிலைக்கு வாங்கி
விட்டேன்.
அதைநான் அணைத்தவுடன் அழுகைநின்று சிரித்துவிட்டேன்.

நெருப்புப் பெட்டி 'பர்னிச்சர்கள்'







நெருப்புப் பெட்டிகளையும் நெருப்புக் குச்சிகளையும் வைத்துக் கொண்டு அற்புதமான சாமான்களெல்லாம் செய்யலாம். ஆனுல் கை ஜாக்கிரதை மட்டும் வேண்டும். இல்லாவிட்டால் வீணுகிவிடும். மேலே இருக்கும் நாற்காலி செய்ய இரண்டு வெறும் பெட்டிகளும் நாலு குச்சிகளும் இருந்தால் போதும். மேஜை செய்யவும் அவ்வளவுதான் தேவை. படத்தில் காட்டியிருப்பதுபோல் நெருப்புப் பெட்டிகளை வைத்து மேலும் கீழும் ஒட்டிக் குச்சிகளைத் துவாரமிட்டுச் செருகவேண்டும். சோபா செய்ய ஒரு பெட்டியே போதும். உள் மூடியைப் பக்கவாட்டுப் பலகைகளாகச் செய்துகொள்ளலாம். எங்கே, செய்து பாருங்கள்!

குழந்தை காந்தி

கி. வா. ஜகந்நாதன்

இந்தியா என்ருல் உலகத்தில் அங்கங்கே உள்ள ஜனங்களுக்கு இரண்டு பொருள் ஞாபகத்துக்கு வரும். இமயமலை இருக்கிறதே, அது ஒன்று. அதைப் போல உயர்ந்த மலை உலகத்திலே வேறு எங்கும் இல்லை. மற்ருென்று மகாத்மா காந்தியின் பெயர். ஒரு கால் இமயமலை சில பேருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனுல் மகாத்மா காந்தியைத் தெரியாத தேசமே இல்லை.

பள்ளியில் படித்தபோது

நம் இந்தியாப் படத்தில் இடப்பக்கத்தில் கிட்டத்தட்டப் பாதியில் காது போல ஒரு பாகம் இருப்பதைப் பார்க்கலாம். அந்த இடத்துக்குக் கூர்ஜரம் என்று பெயர். அங்கே வாழ்பவர்களைக் குஜராத்திகள் என்று சொல்வார்கள். அவர்கள் தாய்மொழி குஜராத்தி. அந்தத் தேசத்தில் பிறந்தவர் காந்தி மகாத்மா. போர்பந்தர் என்ற ஊரில் 1869-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி அவர் பிறந்தார். அவர் தகப்பனுர் பெயர் கபா காந்தி; அம்மா புத்லி பாய். காந்தி என்பது குடும்பப் பெயர். மகாத்மா காந்தியின் முழுப் பெயர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்பது. அதையே சுருக்கி மோ. க. காந்தி என்று அவர் கையெழுத்துப் போடுவார். ஒரு தடவை தமிழிலே அவர் மோ. க. காந்தி என்று

கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறார்.

காந்தியின் அம்மா மிகவும் நல்லவள். தெய்வபக்தி உள்ளவள். நம்முடைய புராணங்களிலே உள்ள பெரியவர்களின் கதைகளெல்லாம் அவளுக்குத் தெரியும். ஒவ்வொரு நாளும் சூரியனைக் கண்ணால் கண்ட பிறகே சாப்பிடுவது என்று ஒரு விரதம் உண்டு. புத்லிபாய் அந்த விரதத்தை அநுஷ்டித்தாள். அந்தமாதம் வானத்தில் எப்போதும் மப்பும் மந்தாரமுமாகவே இருக்கும். சூரியன் தன் முகத்தைச் சுலபத்தில் காட்டமாட்டான். காந்தியின் அம்மாவோ சூரியனைக் கண்டாலொழியச் சாப்பிடுவதில்லை. காந்தி, அம்மாவிடம், "நீ சாப்பிடாமல் இருக்கிறாயே, அம்மா! சூரியன் இன்னும் முகத்தைக் காட்டவில்லையே!" என்று வருத்தத்தோடு சொல்வார். "கடவுளுக்கு நான் உணவு கொள்ள வேண்டுமென்று திருவுள்ளம் இருந்தால் சூரிய தரிசனம் கிடைக்கும். அது கிடைக்காதவரையில், நான் சாப்பிடாமல் இருப்பதே கடவுளுடைய சித்தம் என்றுதான் நினைப்பேன்" என்பாள். என்ன பக்தி பார்த்தீர்களா? தம்முடைய தாய் பட்டினி நீங்கிச் சாப்பிட வேண்டும் என்று காந்திக்கு ஆவலாக இருக்கும். அடிக்கடி வானத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பார். சூரியன் தோன்றினால் ஓட்ட ஓட்டமாக அம்மாவிடம் ஓடி, "அம்மா, அம்மா, அதோ சூரியன்; பார்; பார்த்துவிட்டுச் சாப்பிடு" என்று கூவுவார்.

காந்தியின் தகப்பனார் ராஜகோட் என்ற ஊருக்கு உத்தியோகமாகப் போனார். காந்தியும் அங்கே சென்றார். அங்கே ஒரு சின்னப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தார். அவருக்கு விஷமம் பண்ணவே தெரியாது. மற்றப் பையன்களோடு சேர்ந்து கூடிக் குதித்து விளையாடுவதும் இல்லை. வீட்டிலிருந்து நேரே பள்ளிக்கூடம் போவார்; அங்கே பாடம் உண்டு; அவர் உண்டு. பிறகு பள்ளிக்கூடம் விட்டால் ஒரே ஓட்டத்தில் வீடு வந்து சேர்வார்.

சில காலங் கழித்துச் சின்னப் பள்ளிக்கூடத்தை விட்டுப் பெரிய பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தார். அங்கே படித்துக்கொண்டிருந்தபோது ஒரு நாள் பள்ளிக்கூடத்துக்கு இன்ஸ்பெக்டர் துரை வந்தார். அப்போது காந்தி ஆறாவது வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தார். இன்ஸ்பெக்டர் துரை அந்த வகுப்புக்கு வந்து இங்கிலீஷில் பரீட்சை செய்ய ஆரம்பித்தார். காந்தி இங்கிலீஷில் சுமார்தான். இன்ஸ்பெக்டர் ஐந்து இங்கிலீஷ் வார்த்தைகளைச் சொல்லி அவற்றை எழுதச் சொன்னார்.

சென்னை-600 008

வாத்தியாரும் அங்கே இருந்தார். காந்தி ஒரு வார்த்தையைத் தப்பாக எழுதினர். அதை வாத்தியார் கவனித்தார். அவரை எப்படித் திருத்துவது? பக்கத்தில் இருந்த பையன் சரியாக எழுதியிருந்தான். வாத்தியாருக்கு ஒரு யோசனை தோன்றியது. தம் கால்பூட்ஸால் காந்தியின் காலை அழுத்தினர்; கண்களால் பக்கத்துப் பையனைக் கவனிக்கும்படி ஜாடை செய்தார். காந்தி அவர் ஜாடையைப் புரிந்துகொள்ளவே இல்லை. பக்கத்துப் பையனைப் பார்த்துக் காப்பி அடிக்கலாம் என்ற விஷயமே அவர் மனசுக்குத் தோன்றவில்லை. வாத்தியாரிடம் மற்றவைகளையெல்லாம் கற்றுக் கொண்டார்; ஆனல் காப்பி அடிக்கும் விதத்தை அவர் கற்றுக் கொள்ளவில்லை.



காலேஜில் படித்தபோது

குஜராத்தி பாஷையில் சிரவணநாடகம் என்ற ஒரு புத்தகம் உண்டு. சிரவணன் என்ற சிறுவன் தன் தாய் தகப்பனிடம் மிகவும் அன்பாக நடந்த கதையைச் சொல்வது அது. அவனுடைய அம்மா அப்பா மிகவும் கிழவர்கள். ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கூடையில் வைத்துக் காவடி கட்டி, இரண்டு புறத்திலும் அந்தக் கூடைகளைக் கட்டிச் சுமந்து கொண்டே போவானும். ஒரு நாள் ஒரு காட்டில் அவன் தங்கினன். அம்மா அப்பாவுக்கு அதிகத் தாகமாக இருந்தது. பக்கத்தில் இருந்த குளத்தில் தண்ணீர் மொண்டு கொண்டு வரப்போனன். குறுகின வாயுள்ள பாத்திரத்தில் தண்ணீர் மொள்ளும்போது கொடக்கொடக் என்ற சத்தம் கேட்டது.

அப்போது அந்தக் காட்டில் வேட்டையாட வந்திருந்த தசரத மகாராஜாவின் காதில் இந்தச் சத்தம் விழுந்தது. ராமருடைய தகப்பனுராகிய தசரத மகாராஜாதாம் அவர். அங்கே ஏதோ காட்டு மிருகம் தண்ணீர் குடிக்கிறதென்று எண்ணிக்கொண்டு, அந்தப் பக்கமாக ஓர் அம்பை விட்டார். அது சிரவணன்மேல் பாய்ந்தது. "ஐயோ!" என்று கத்திக் கொண்டு விழுந்தான். தசரதர் ஓடிப்போய்ப் பார்த்தார். சிரவணன் ரத்தவெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறுன். தசரதர் அழுதார். "ஐயோ! தெரியாமல் செய்துவிட்டேன்!" என்று கதறினர். உயிர் போகிற தறுவாயில் இருந்தான் சிரவணன். அப்போது கூட அவன் தன் தாய் தந்தையை மறக்கவில்லை. "மகாராஜா, என் அம்மா அப்பா தாகத்தோடு துன்புறுவார்கள். நீர் அவர்களிடம் வேகமாகப் போய்த் தண்ணீர் கொடும்" என்று சொல்லி உயிர்விட்டான். தசரதர் அந்தக் கிழவர்களிடம்போய் நடந்ததைச் சொன்னர். அவர்கள் கதறு கதறென்று கதறினர்கள்.

அந்தச் சிரவணன் கதையைக் காந்தி வாசித்தார். சிரவணனுடைய தாய் தகப்பனரின் துக்கம் அவர் உள்ளத்தைக் கனியச் செய்தது. சிரவணனைப்போல அம்மா அப்பாவிடம் அன்பாக இருக்க வேண்டும் என்று உறுதி செய்துகொண்டார்.

அவர் சிரவண நாடகத்தைப் படித்துப் பார்த்து ஈடுபட்டார். மற்றொரு நாடகத்தைக் கண்ணால் பார்த்து அதில் உள்ளத்தைப் பறிகொடுத்தார். அவர் வாழ்வு முழுவதும் சத்தியத்தைக் கடைப்பிடித்து வாழ்வதற்கு அந்த நாடகமே தூண்டுகோலாக இருந்தது. நாடு, மனைவி, மகன், பதவி எல்லாம் இழந்தாலும் சத்தியத்தை விடாமல் காப்பாற்றின அரிச்சந்திரன் கதையைச் சொல்லும் அரிச்சந்திர நாடகந்தான் அது. அந்த நாடகத்தைக் காந்தி மிகவும் ஆவலோடு பார்த்தார். அரிச்சந்திரன் பட்ட துன்பங்களை எண்ணும்போது அவரை அறியாமலே கண்ணீர் வரும். பெரியவரான பிறகுகூட அந்த நாடகத்தைப் படிக்கும்போது அவர் கண்ணீர் விடுவாராம்.

காந்திக்குப் பள்ளிக்கூடத்தில் ஒரு தோழன் ஏற்பட்டான். அவருடைய அண்ணுவுக்கும் அவன் தோழன். முதலில் அண்ணுவுக்குச் சிநேகிதன் ஆகிப் பிறகு தம்பிக்கும் தோழன் ஆனுன். அவன் பீடி சிகரெட் குடிப்பான்; மாமிசம் சாப்பிடுவான்; பொய் சொல்வான்; ஏமாற்றுவான்; திருடுவான். இன்னும் என்ன வேண்டும்? பலசாலி. "மாமிசம் சாப்பிட்டால்தான்

உடம்பு பலமடையும். எந்தக் காரியத்தையும் செய்யலாம். நீ நே என்று இருக்கிறாயே; நீயும் மாமிசம் தின்றால் குண்டுக்காளை மாதிரி கொழுத்துப் போவாய். வெள்ளைக்காரர்கள் பலசாலியாக இருக்கிறார்களே; ஏன் தெரியுமா? மாமிசத்தைக் கண்டால் ஹூஹூம் என்று ஓடுவதில்லை. வயிறு நிரம்பச் சாப்பிடுவார்கள். அதனால் தான் அவர்கள் இந்தியாவையே ஆளுகிறார்கள். இந்த ஊரில் யார்தாம் மாமிசம் சாப்பிடவில்லை? நீ என்னவோ, பெரிய மனிதர்களெல்லாம் சுத்த வைஷ்ணவர்கள் என்று நினைத்துக்கொண் டிருக்கிறாய்! எனக்குத் தெரியும், தம்பி, அவர்கள் ரகசியமெல்லாம். சாராயமும் மாமிசமும் அருந்தாத பெரிய மனுஷர் ஒருவரைக் காட்டு, பார்க்கலாம். நான் காதை அறுத்துக்கொள்கிறேன். எல்லோரும் மறைவாகச் செய்கிறார்கள். நாமும் அப்படிச் செய்யலாமே!" என்று காந்திக்கு அவன் உபதேசம் செய்தான். காந்தி மாமிச வாசனையே காணாத குடும்பத்தில் பிறந்தவர். ஆதலால் காந்திக்கு மாமிசம் என்றாலே இயற்கையாக ஓர் அருவருப்பு இருந்தது. ஆனால் அந்தத் தோழன் படிப்படியாக உருவேற்றிவந்தான். காந்தி அவன் பேச்சில் மயங்கினார்.

ஒரு நாள் வெகு தூரமான தனி யிடத்துக்கு அவரைத் தோழன் அழைத்துச் சென்றான். மாமிச உணவை முதல் முதலாக அன்று காந்தி புசித்தார். அதை அவர் உண்பதற்குள் போதும் போது மென்றாகிவிட்டது, அவ்வளவு அருவருப்பு! வாந்தியெடுக்க வந்தது. அன்று இரவு முழுவதும் அவருக்குத் தூக்கமே இல்லை. அவர் வயிற்றுக்குள்ளே இருந்து ஆடு ஒன்று, "அம்மே, அம்மே" என்று கத்துவதுபோல இருந்தது.

சில நாட்கள் இந்தக் கெட்ட பழக்கம் காந்தியிடம் இருந்தது. அவர் புலால் உண்பது தாய் தகப்பனுருக்குத் தெரியாது. வெளிப்படையாகத் தின்னத் தைரியம் இல்லை. சில சமயங்களில் பொய் வேறு சொல்ல வேண்டி வந்தது. சிரவணனுடைய கதையும் அரிச்சந்திரனுடைய கதையும் அவர் மனசில் பதிந்திருந்தன அல்லவா? தாய் தகப்பனுருக்குத் தெரியாமல் ஒரு காரியத்தைச் செய்வதும், அதற்காகச் சில பொய் சொல்வதும் அவருக்குப் பிடிக்கவில்லை. மிகவும் வேதனை அடைந்தார். ஆகவே மாமிசம் உண்பதை விட்டுவிட்டார்.

காந்தியின் சொந்தக்காரர் ஒருவர் அவருக்குச் சிகரெட் குடிக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுத்தார். சிகரெட் வாங்கப் பணம் வேண்டுமே! சிகரெட்டுக்காகவென்று

அப்பாவிடம் சொல்லிப் பணம் வாங்க முடியுமா? ஆகையால் திருட ஆரம்பித்தார். வீட்டு வேலைக்காரர்கள் பணத்தைத் திருடிச் சிகரெட் வாங்கிக் குடித்தார். அவருக்கு அவருடைய தமையனே கூட்டாளி. தமையனர் கையில் தங்கக் காப்புப் போட்டிருந்தார். அதில் சிறிது வெட்டி விற்று, அந்தப் பணத்துக்குச் சிகரெட் வாங்கிக் குடித்தார்கள்; பழைய கடனையும் தீர்த்தார்கள். காந்தியின் மனசு அதைப் பொறுக்கவில்லை. 'நமக்கு வேண்டியதையெல்லாம் வாங்கித் தந்து நம்மைக் காப்பாற்றுகிறார் அப்பா. அவருக்கு வஞ்சகம் செய்து, இந்தக் காப்பை வெட்டினேமே! என்ன கொடுமை!' என்று வருந்தினர். இதை அப்பாவிடம் சொல்லி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று தீர்மானித்தார். எப்படிச் சொல்வது? நேரிலே சொல்லத் தைரியம் வரவில்லை. ஒரு கடிதத்தில் தாம் செய்த பிழையை எழுதி, என்ன தண்டனை செய்தாலும் ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டிருந்தார். "இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்" என்று உறுதியும் கூறியிருந்தார்.

அப்பா, அப்போது நோய் வாய்ப்பட்டிருந்தார். படுக்கையில் படுத்தபடி இருந்தார். காந்தி கடிதத்தைக் கட்டிலின் மேல் வைத்துவிட்டுக் கீழே உட்கார்ந்து கொண்டார். 'அப்பா என்ன செய்தாலும் சரி; ஏற்றுக் கொள்வதுதான் நம் பாவத்துக்குப் பரிகாரம்' என்ற நினைப்போடு உட்கார்ந்திருந்தார்.

தந்தை எழுந்து உட்கார்ந்து கடிதத்தை எடுத்துப் படித்தார். அவர் முகம் சிவக்கவில்லை. கண்களில் தீப்பொறி பறக்கவில்லை. தலையில் அடித்துக்கொள்ளவில்லை. இரையவில்லை. ஆனால் அவர் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் ஒழுகியது. அவர் உள்ளம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் காந்தி சிந்தித்துப் பார்த்தார். அவருக்கும் அழுகை வந்துவிட்டது. தந்தை கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டு மீட்டும் படுத்துக்கொண்டார். ஒரு வார்த்தையும் பேசவில்லை. பேசாவிட்டாலும் அவர் கண்ணீர் காந்தியின் உள்ளத்தைச் சுட்டது; அவருடைய அழுக்கை அலம்பியது. அது முதல் திருட்டு, புகை பிடிப்பது முதலிய கெட்ட பழக்கங்கள் அவரிடமிருந்து ஓடியே போய்விட்டன.

காந்தி மெட்ரிகுலேஷனில் தேர்ச்சி பெற்றார். பிறகு பாவநகரில் உள்ள காலேஜில் ஒரு வருஷம் படித்தார். அப்பால் சீமைக்குப் போய்ப் படித்தால் அவர் முன்னுக்கு வருவார் என்று வேண்டியவர்கள் சொன்னார்கள். காந்திக்

கும் அது விருப்பமாகவே இருந்தது. அவருடைய தகப்பனர் அப்போது இறந்துவிட்டார். காந்தி சீமைக்குப் போவது அவர் தாய்க்குப் பிடிக்கவில்லை. அங்கே போனல் கெட்ட பழக்கங்கள் வந்துவிடுமென்ற பயம் அவளுக்கு. மதுபானம், மாமிச உணவு, ஒழுக்கப் பிசகு எல்லாம் ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்தால், சீமைக்குப் போக வேண்டாம் என்று சொன்னள். ஆனல் உறவினர்கள் வற்புறுத்தினர்கள். காந்திக்கும் ஆசையாக இருந்தது. கடைசியில், "மதுவைத் தொடமாட்டேன்; மாமிசம் உண்ணுவதில்லை; கெட்ட நடத்தையில் ஈடுபடமாட்டேன்" என்று தாய்க்குச் சத்தியம்செய்து கொடுத்தார் காந்தி. அதன் பிறகு சீமைக்குப் போக உத்தரவு கொடுத்தாள் தாய்.

சீமைக்குப் போய்ப் படித்தார் காந்தி. தாயிடம் சத்தியம் செய்தபடியே நடந்து கொண்டார். அது தவறும் படியான சந்தர்ப்பங்கள் வந்தன. ஆனலும் காந்தி அப்போது மனம் தளராமல் சத்தியத்தைக் காப்பாற்றினர். லண்டனில் பாரிஸ்டருக்குப் படித்தார். இந்தியாவுக்கு வந்து சில காலம் பாரிஸ்டராக இருந்தார். பிறகு தென் ஆபிரிக்கா சென்று பாரிஸ்டராக இருந்தார். அங்கே இந்தியர்கள் படும் துன்பத்தைப் போக்கப் போராடினர். அப்போது தான் காந்தியின் உண்மையான பெருமை தெரிந்தது. தென் ஆப்பிரிக்காவில் அவர் செய்த காரியங்களும், பிறகு இந்தியாவுக்கு வந்து இந்தியாவின் அடிமை வாழ்வைப் போக்கச் செய்த காரியங்களும் பாரதம், ராமாயணம் போலப் பெரிய பெரிய கதையாகச் சொல்ல வேண்டியவை.

இன்று பாரத நாடு சுதந்தர நாடாக இருப்பது காந்தி மகாத்மாவினல்தான். அவருடைய பெயரைச் சொல்லிக் கொண்டு நாம் பெருமை அடைகிறேம். 1948-ஆம் வருஷம் ஜனவரி மாசம் 30-ஆம் தேதி ஒரு வெறியனுடைய துப்பாக்கிக்கு அவர் இரையானர். மரணத்துக்கு அஞ்சாமல் வாழ்ந்தவர் அவர். அவர் வாழ்ந்த நாட்டில் வாழ நாம் கொடுத்து வைத்திருக்கிறேம். அதைக் காட்டிலும் பெரிய சிறப்பு வேறு ஒன்றும் இல்லை.

எழுத்திலே படங்கள்



1. தவளை. 2. தேள். 3. மீன்.
4. பாம்பு. 5. வண்டு. 6. ஆமை.

புறா

திஜர

ஒரு கோபுரத்திலே புரை புரையாகப் பல இடுக்குகள் இருந்தன. அவைகளிலே பல புறாக்கள் வசித்தன. பலவகைப் புறாக்கள் வசித்தன.

புறாக்களில் எத்தனையோ வகை. மணிப் புறா, காட்டுப் புறா, தவிட்டுப் புறா, பச்சைப் புறா, மாடப் புறா இன்னும் இந்த மாதிரி நாற்பது வகைக்கு மேல் உண்டு. புறாவைப் பரிசுத்த ஆவியின் சின்னமாகக் கிருஸ்தவர் மதிக்கிறார்கள். சமாதானம், தூய்மை இரண்டையும் குறிப்பதாக, புறாவை அவர்கள் சித்திரிக்கிறார்கள்.

இந்தக் கோபுரத்தில் மாடப் புறாக்களும் மணிப் புறாக்களும் வசித்தன. அவைகளில் இரண்டு புறாக்கள் நேசமாக இருந்தன. ஒன்று ஆண் புறா; ஒன்று பெண் புறா. ஆண் புறா கணவன்; பெண் புறா மனைவி.

ஒரு நாள் பெண் புறா, "ஹூம் - ஹூம் - ஹூம்! நான் முட்டை இடப்போகிறேன்" என்று புறாவின் பாஷையில் சொல்லியது.

"குரும் - குரும் - குரும்! அப்படியா? ரொம்பவும் சந்தோஷம். நமக்குக் குஞ்சுகள் பிறக்கும். நல்லதுதான்" என்றது ஆண் புறா.

பெண் புறா இரண்டு முட்டை இட்டது. குஞ்சு பொரித்தது. இரண்டு அழகான குஞ்சுகள். அம்மாப் புறா, அப்பாப் புறா

இரண்டும் அந்தக் குஞ்சுகளுக்குப் பால் ஊட்டின. இதுதான் ஆச்சரியம். மற்றப் பட்சியெல்லாம் குஞ்சுக்குப் பால் ஊட்டாது. புருவின் தொண்டையிலே ஒருவிதப் பால் சுரக்கும். ஆண் புருவுக்கும் சுரக்கும்; பெண் புருவுக்கும் சுரக்கும். இரண்டும் அந்தப் பாலைக் குஞ்சுகளுக்கு ஊட்டும். இந்தப் புருக்களும் குஞ்சுகளும் ரொம்பவும் மகிழ்ச்சியோடு இருந்தன.

ஒருநாள் ஆண் புருவும் பெண் புருவும் வெளியே சென்றன. இரை தேடப் போயின. வெகு நேரமாயிற்று. 'அப்பாவும் அம்மாவும் இன்னும் வரவில்லையே' என்று குஞ்சுகள் தவித்தன.

கடைசியில் பெண் புரு தனியே வந்தது. "ஹூம் - ஹூம் - ஹூம்" என்று அழுதுகொண்டே வந்தது.

"ஏன் அம்மா அழுகிருய்?" என்று குஞ்சுகள் கேட்டன.

"என் அருமைக் கண்மணிகளே, அப்பா போய்விட்டார். வேடன் அடித்துக் கொன்றுவிட்டான்" என்று கதறியது.

புருஷன் போனதால், பெண் புரு ஆருத்துயரம் அடைந்தது. அதற்கு இரை செல்லவில்லை. சில நாளில் இறந்துவிட்டது.

குஞ்சுப் புருக்கள் தவித்தன. என்ன செய்வது? அழுதால் பயனுண்டா? தாங்களே இரை தேடி வாழ்ந்தன.

குஞ்சுகளில் ஒன்று ஒரு மனிதனிடம் சிக்கியது. அவன் வீட்டிலே பல புருக்கள் வளர்க்கிறவன். புருக் கூடு கட்டியிருந்தான். இந்தக் குஞ்சையும் எடுத்துக்கொண்டு போனுன். அன்போடு வளர்த்தான்.

குஞ்சு முதலில் பயந்தது. பிறகு பயம் தெளிந்தது. மற்றப் புருக்களோடு நேசமாக வாழ்ந்தது.

இது வளர்ந்தது. அழகான பெரிய புரு ஆயிற்று. புருக்காரன் இதையும் மற்றப் புருக்களோடு பறக்கவிட்டான். இது ஜோராகப் பறந்தது. ஆகாசத்திலே ரொம்ப உயரப் பறந்தது. ஒரு சமயம் மேக மண்டலத்தை எட்டிவிட்டதோ என்று தோன்றியது; அவ்வளவு உயரம் போயிற்று. அப்போது இறக்கை கூடக் கொஞ்சம் தீய்ந்து போயிற்று. புருக்காரன் பெருமை



டந்தான். இதனிடம் ரொம்ப
ம் அன்பு கொண்டான்.

மற்றப் புருக்காரர்களுடன் இந்தப் புருக்காரன் போட்டி போட எண்ணினான். பிரிட்டிஷ் ராஜாவே இப்படிப் போட்டி போடுவதுண்டு. அவர் ஏராளமான புரு வளர்க்கிறார். அவருடைய புருவையும் குடியானவன் புருவையும்கூடப் போட்டிக்கு விடுவார்கள். சில சமயம் குடியானவன் புருவே ஜயித்து விடும். ராஜா அதற்காக வருத்தப்படமாட்டார்; சந்தோஷமே அடைவார். எல்லாம் விளையாட்டுத்தானே. விளையாட்டிலே வருத்தப்படலாமோ?

இந்தப் புருக்காரனுக்கும் இன்னொருவனுக்கும் போட்டி நடந்தது. இந்தப் புருவை இவன் பறக்கவிட்டான். மற்றவன் தன் புருவைப் பறக்கவிட்டான். இரண்டும் விர் என்று பறந்தன. ஆகாசத்திலே குட்டிக்கரணமெல்லாம் போட்டன. வெகு உயரப் பறந்தன. இரண்டு புள்ளிமாதிரி பறந்தன.

"அதோ பார்; என் புரு ஜம் என்று பறக்கிறது. களைக்காமல் பறக்கிறது, உன் புரு ஆட்டமெடுத்துவிட்டது. சிறகொடிந்ததுமாதிரி தத்தளிக்கிறது. கீழே வரப் பார்க்கிறது" என்றான் மற்றவன்.

"என் புருவா வரும்! உன் புருதான் நோஞ்சல். எல்லாம் பத்து நிமிஷத்தில் தெரிந்துவிடும்" என்றான் இவன்.

இரண்டுபேரும் இப்படி வாக்குவாதம் செய்துகொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில் ஒரு புரு களைத்துவிட்டது. இறங்கி வந்தது. புருக்காரர்களுக்குக் கண் வெகு கூர்மை. உயரத்தில் வரும்போதே அது யார் புரு என்று கண்டுகொண்டார்கள். மற்றவனின் புருதான் அது.

"நான் தோற்றேன்" என்று அவன் ஒப்புக்கொண்டான். பந்தயப் பணத்தைக் கொடுத்துவிட்டான்.

இந்தப் புரு இன்னும் வெகு நேரம் பறந்தது. இவன் கூவிக் கூவிச் செல்லமாய் அழைத்த பிறகுதான் இறங்கியது. இவனுக்குப் பெருமை பூரித்தது.

இதைச் செய்திகொண்டு போகப் பழக்க விரும்பினான். இதற்கு மிகவும் சுகமான ஒரு



கூடு கட்டினான். புருக்களுக்குத் தங்கள் கூட்டிலே ரொம்ப ஆசை. அவைகளை எவ்வளவு தூரத்திலே கொண்டுபோய்விட்டாலும் சரி; அதிவேகமாகப் பறந்து கூட்டுக்கு வந்து சேரும். சில புருக்களை நூறு மைலுக்கு அப்பால் விட்டால்கூட, இப்படி ஓடிவரும்; கூட்டை அடையும். அப்போது ஒரு சிறு துண்டுக் கடிதத்தில் செய்தி எழுதுவார்கள். அந்தத் துண்டைப் புருவின் காலிலோ கழுத்திலோ கட்டி விடுவார்கள். புருவோடு செய்தியும் விடுவந்து சேரும்.

தானியங்களையும் சிறுபூச்சிகளையும் புரு தின்னும். அது தண்ணீர் குடிப்பதுதான் விநோதம். குதிரை குடிப்பதுமாதிரி ஒரே இழுப்பாய் உறிஞ்சிவிடும். மணிக்கு முப்பது, நாற்பது மைல் வேகத்தில் புரு பறக்கும். அதன் மார்புச் சதை மிக்க உறுதி. இறக்கைகளை மோட்டார் மாதிரி அந்தச் சதை இயக்குகிறது. புரு நன்றாய்ப் பறப்பது இதனால்தான்.

புருக்காரன் இந்தப் புருவுக்கு நன்றாகத் தீனி கொடுத்தான். பிறகு ஒரு பர்லாங் தூரம் இதைக் கொண்டுபோனான். பறக்க விட்டான். இது கூட்டுக்கு வந்து சேர்ந்தது. அடுத்த நாள் ஒன்றரைப் பர்லாங்கில் கொண்டு போய் விட்டான். மூன்றாம் நாள் இரண்டு பர்லாங்கில் கொண்டு போய் விட்டான். இப்படியே ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாகத் தூரத்தை அதிகரித்துக்கொண்டே போனான். பத்து மைல் தூரத்திலிருந்து கூட்டுக்கு வர இது பழகி விட்டது.

புருக்காரனுக்குக் குஷி பிறந்து விட்டது. தலைகால் புரியவில்லை. பத்து மைலிலிருந்து ஒரேய யாகப் பதினைந்து மைலுக் போய்விட்டான். புருவை அங்கே பறக்க விட்டான்.

பாவம், புரு என்ன செய்யும்? வழி சரியாகத் தெரியவில்லை. பழக்கமில்லாத வழியில் யாருக்குத்தான் வழி தப்பாது? அப்படியும் இது அஞ்சவில்லை. கஷ்டப்பட்டுப் பறந்து வந்தது.

வழியிலே வல்லூறு ஒன்று வந்தது. அது புருவை அடித்துத் தின்ன ஆசை கொண்டது. குரூரமாய்ப் பாய்ந்து பறந்து வந்தது.

‘குரும்-குரும்-குரும்! ஐயோ! என்ன அபாயம்! சுகமான கூடு வேண்டாம். எங்கேயாவது உயிர் தப்பி ஓடினால் போதும்’ என்று புரு எண்ணியது. ஓடியது; அதிவேகமாகப் பறந்தோடியது; அம்புபோல் பாய்ந்து பறந்தது. தப்பித்தோடியது. பழைய கோபுரத்துக்கே போய்விட்டது.

புருக்காரன் வீட்டுக்கு வந்தான். புரு இன்னும் வரவில்லை என்று கண்டான். சாயங்காலம் வரைக்கும் காத்துக் காத்துப் பார்த்தான். புரு வரவேயில்லை. எப்படி வரும்? அதுதான் கோபுரத்துக்குப் போய் வசிக்கத் தொடங்கிவிட்டதே! “அடடா! பேராசைப்பட்டேன். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு. அதனால் என் அருமையான புருவை இழந்துவிட்டேனே!” என்று துக்கப்பட்டான். புருவுக்கும் துக்கந்தான். தன் அருமையான கூடு போய்விட்டதே என்ற துக்கம். ஆனால், அதன் துக்கம் கொஞ்ச நாளில் ஆறிவிட்டது. அழகான கோபுரத்து மாடம் அதற்குப் பழகிவிட்டது. தவிர, அதற்கு மற்றொரு புருவும் ஜோடி சேர்ந்து விட்டது. இரண்டும் சந்தோஷமாக வாழ்ந்தன.



கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

அன்பார்ந்த வணக்கம். தங்கள் பேனுப் பரிசு கிடைத்தது. பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன். தங்களது ஆதரவும் அன்பும் எனக்கு என்றும் தேவை.

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் 'கண்ணன்' தனது இனிய அமுத மொழிகளால், அறிவிலும், ஆற்றலிலும் அருந்தொண்டு புரியும் என்று நம்புகிறேன்.

கண்ணன் வாழ்க!

கி. ஜயராமன் (J. 25)



[பேனுப் பரிசுப் போட்டியில் பரிசு பெற்ற குழந்தை]

உங்கள் வயசும் வீட்டு நம்பரும்

உங்கள் வயசை மனசில் நினைத்துக்கொள்ளுங்கள். அதை 2-ஆல் பெருக்குங்கள். 5-ஐக் கூட்டிக் கொள்ளுங்கள். மறுபடி 50-ஆல் பெருக்கி, உங்கள் வீட்டு நம்பரைக் கூட்டிக்கொள்ளுங்கள். மறுபடியும் அத்துடன் 365-ஐக் கூட்டி, 615-ஐக் கழித்தால் முதல் பகுதி உங்கள் வயது. பிற்பகுதி உங்கள் வீட்டு நம்பர். சரிதானு பாருங்கள்!

கே. சந்திரமௌளி, வயது 12, (C. 7.) மயிலாப்பூர்.

ஃ ஃ ஃ

எங்கள் வீட்டில் நடந்தது

ஒரு நாள் என் அம்மா தட்டில் இட்லி கொண்டுவந்து வைத்தாள். "இதை ஒரே வாயால் சாப்பிடுகிறேன்'' என்ருன் என் தம்பி. "சாப்பிடுடா பார்க்கலாம்'' என்ருள் அம்மா. ஆனல் தம்பியோ கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துத் தின்ன ஆரம்பித்தான். அம்மா, "என்னடா ஒரே வாயில் சாப்பிடுகிறேன் என்று சொல்லி விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுகிருயே'' என்ருள்.

"இதோ பாரேன். எனக்கு ஒரு வாய்தானே இருக்கிறது!'' என்ருன்.

பெயர் எழுதவலலை.

எட்டுக் கட்டம்



இந்தக் கட்டத்தில் ஒவ்வொரு காயாக வைக்கவேண்டும். குறுக்காகவோ நேராகவோ இன்னெரு காய் கட்டத்தில் இருக்கக் கூடாது. இப்படி இந்தக் கட்டத்தில் எட்டுக் காய்களை வைக்க வேண்டும். தெரியாவிட்டால் விடையைக் கீழே பாருங்கள்.

பேராசிரியர், காரைக்குடி.

எட்டுக் கட்டத்தின் விடை: மேலிருந்து முதல் வரிசையில் இடமிருந்து நாலாவது கட்டம். இரண்டாம் வரிசையில் முதல் கட்டம். மூன்ரும் வரிசையில் ஐந்தாவது கட்டம். நாலாவது வரிசையில் கடைசிக் கட்டம். ஐந்தாவது வரிசையில் ஆருவது கட்டம். ஆருவது வரிசையில் மூன்ருவது கட்டம். ஏழாவது வரிசையில் ஏழாவது கட்டம். கடைசி வரிசையில் இரண்டாவது கட்டம்.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, நானும் எத்தனையோ கதை எழுதி கண்ணனுக்கு அனுப்பியிருக்கிறேன். ஒன்றுகூடப் பிரசுரமாக வில்லை. இதனால் எனக்குக் கதை எழுதவே வெறுப்பு உண்டாகி விட்டது. இத்துடன் ஒரு கதையை அனுப்பிவைத்திருக்கிறேன். பிரசுரிக்க முடிந்தால் பிரசுரிக்கவும். இல்லாவிட்டால் திருப்பி அனுப்பி வைக்கவும். உண்மையாகச் சொல்கிறேன்; இது பிரசுரமானால்தான் இனிமேல் கதை எழுதச் சந்தோஷமுண்டாகும். பின் உங்கள் இஷ்டம்.

இப்படிக்கு, S. 64.

('இதை'ப் பிரசுரித்துவிட்டேன்; திருப்திதானே!—ஆசிரியர்.)

ஃ ஃ ஃ

கூட்டல் பாட்டு

பத்தும் பத்தும் இருபது—
பட்சணம் அம்மா தருவது—
இருபதும் பத்தும் முப்பது—
எருது வண்டி இழுப்பது—
முப்பதும் பத்தும் நாற்பது—
முத்து மாலை கோப்பது—
நாற்பதும் பத்தும் ஐம்பது—
நல்ல சோறு தின்பது—
ஐம்பதும் பத்தும் அறுபது—
அப்பம் பாட்டி தருவது—
அறுபதும் பத்தும் எழுபது—
அந்த நிலம் உழுவது—
எழுபதும் பத்தும் எண்பது—
எள்ளுச் சாதம் உண்பது—
எண்பதும் பத்தும் தொண்ணூறு—
உகந்து பூசுவது திருநீறு—
தொண்ணூறும் பத்தும் ஒரு நூறு—
தோழனே வாய்பாடிதைக் கூறு.

டி. கிருஷ்ணமூர்த்தி,
திருப்பூர்.

ஃ ஃ ஃ

காபி பில்டர் 'பாத்'

பூ பூவாக விழுகிற குழாயில் குளிக்கவேண்டும் என்று பிடிவா ம் பிடித்தான் கிட்டு. எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால் வன் அண்ணன் பாலு உள்ளே போனான். "சரி வாடா!" என்று த் ரூமு'க்குள் அழைத்துப் போனான். சற்றைக்கெல்லாம் உள்ளே நந்து சிரிப்புச் சத்தம் வந்தது. எல்லாரும் எட்டிப் பார்த்தோம். ட்டுவுக்கு 'ஷவர் பாத்' நடந்துகொண் டிருந்தது. ஷவர் என்றால் ங்கே காபி பில்டரிலிருந்து ஷவர் வந்துகொண் டிருந்தது! கிட்டு க்கு மட்டுமா ஆனந்தம்? எல்லாருக்குமே அதைப் பார்க்கும் ாது எப்படி இருக்கும்?

—M. S. லக்ஷ்மி (நெல்லிக்குப்பம்)

'சுண்டு'

விடு -- விடாதே!

இந்த விளையாட்டைப் படித்துவிட்டு, 'பூ, இவ்வளவுதானா?' என்று சிலருக்குத் தோன்றலாம். விளையாடிப் பார்த்தால் அல்லவா தெரியும் இதிலுள்ள சுவாரஸ்யம்!

பையன்கள் வரிசையாக நிற்கவேண்டும். கைக்குட்டையின் இரு நுனிகளையும் கைகளில், படத்தில் காட்டியிருப்பதுபோல், பிடித்துக்கொள்ள வேண்டும். ஒருவன் மட்டும் எதிரில் நின்று, வேகமாக அடுத்தடுத்து 'விடு, விடாதே', 'விடு, விடாதே' என்று சொல்லிக்கொண்டே, 'விடு' என்றோ 'விடாதே' என்றோ கடைசியில் ஆர்டர் போடுவான். "விடு" என்றால் கைக்குட்டையை நழுவ விடவேண்டும். "விடாதே" என்றால் நழுவாமல் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். இதற்கு நேர் மாறுதலாக யார் செய்கிறார்களோ அவர்கள் தோற்றவர்கள்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லா[...] யாத்திரை, பரிசுகள், அ[...] வளர்ச்சி சாதனங்கள் மு[...] எத்தனையோ நன்மைகளு[...] வசதிகளும் கிடைக்கும். இ[...]துள் 1900 பேருக்குமேல் நி[...]தர அங்கத்தினராகச் சே[...]ந்துவிட்டார்கள்.

உங்களுக்கு இதில் உடனே [...]ரவேண்டுமென்று ஆசையாக இல்லையா? சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவு தான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவோம். மூன்று மாதக் கூபன்களைப் பூர்த்திசெய்து மொத்தமாக அனுப்பலாம். அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் அனுப்பவேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம்.

இந்த இதழ்க் கடைசி அட்டையில் காமிராப் பரிசுப் போட்டி ஒன்று வெளியிட்டிருக்கிறோம். இந்தப் போட்டியில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம். போட்டியில் கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் கதையுடன் கூபனைப் பூர்த்தி செய்து அனுப்பினாலும் சரியே. மற்றவர்கள் இதில் கலந்து கொள்ள முடியாது.

Reg. No. M. 5

காமிராப் பரிசு

சென்ற மாதமே காமிராப் பரிசைப்பற்றித் தெரிவித்திருக்கிறேன். ஜோரான 'பிரௌனி காமிரா' ஒன்றைப் பரிசாகக் கொடுக்கப் போகிறேன். அது வேண்டுமானால் ஒரு கதை எழுத வேண்டும். "எந்தப் படத்துக்குக் கதை எழுதவேண்டும்?" என்று கேட்பீர்கள். இந்தத் தடவை படத்தைப் பார்த்து எழுத வேண்டியதில்லை. தபால்காரனைப்பற்றி ஏதாவது கதை எழுதி அனுப்புங்கள். சிறந்த கதைக்குக் காமிராப் பரிசு கிடைக்கும். அடுத்தபடி வரும் நல்ல கதைகள் ஒன்று இரண்டுக்கும் ஏதாவது பரிசு உண்டு. தபால்காரனைப்பற்றி உங்களுக்குத் தெரியாதா? எவ்வளவு குழந்தைகள் கண்ணன் கழகக் கூபனை அனுப்பிவிட்டு, தபால்காரனை எதிர்பார்த்து நிற்கிறீர்கள்! அந்தத் தபால்காரனைப்பற்றித்தான் கதை எழுத வேண்டும். போன தடவை நடந்த பேனாப் பரிசுக்கு நானூறு கதைகள் வந்தன. இந்தத் தபால்காரன் கதை ஆயிரமாவது வருமென்று எதிர்பார்க்கிறேன்.

நிபந்தனைகள்:

1. நீங்களாகவே எழுதிய சொந்தக் கதையாக இருக்கவேண்டும்.
2. கண்ணனில் 4 - முதல் 6 பக்கங்களுக்கு மேற்படாமல் கதை இரு வேண்டும்.
3. எழுதுகிறவர் கண்ணன் கழக கத்தினராக இருக்க வேண்டு
4. 7-முதல் 15-வயதுக்குள் இரு பவர்களே போட்டியில் கலந் கொள்ளலாம்.
5. உங்கள் பெற்றோர்களோ வாத்தியாரோ உங்கள் வயசுக்கு அத்தாட்சி கொடுக்க வேண்டும்.
6. ஒரே பக்கத்தில் தெளிவாக மையால் எழுதவேண்டும்.
7. கதை கிடைக்க வேண்டிய கடைசித் தேதி 30-6-50